விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 14 புதன்கிழமை (26.02.2003) தொலைபேசி- 2223378 ஒலி 69

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# ஐ.தே.முன்னணி அரசுக்கு ஆபத்து

# ஸ்ரீ.சு.கட்சி-ஜே.வி.பி கூட்டு உறுதி புலிகளுடன் பேசுவதிலும் இணக்கம்!

## —நேற்றைய சந்திப்பில் முடிவு—

(நமது நிருபர்)

**அரசு தற்போது முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சிகளுக்கு எந்தவிதமான முட்டுக்கட்டைகளுக்கும் இடம் கொடுக்காத வகையில் தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தையை சில நிபந்தனைகளின் அடிப்படையில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும்,ஜே.வி.பி.யும் கருத்தொற்றுமைக்கு வந்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் நேற்று மாலை தெரிவித்தன.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்களுக்கும் ஜே.வி.பியின் தலைவர்களுக்குமிடையே ஜனாதிபதி மாளிகையில் நேற்று பல மணித்தியாலங்களாக பேச்சு வார்த்தை நடை பெற்றது. இதனையடுத்து இரு கட்சித் தலைவர்களும் மேற்படி கருத்தொற்றுமைக்கு வந்ததாக சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று நடை பெற்ற இப் பேச்சு வார்த்தையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம கட்சியின் செயலாளர் ஸ்ரீபால டி சில்வா டி.எம்.ஜெயரத்தினா ஆகியோரும் ஜே.பி.பியின் சார்பில் ரில்வின் சில்வா ,விமல்வீர வன்ச அனுரகுமார திஸநாயக்கா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நேற்றைய பேச்சுவார்த்தையில் தேசிய பிரச்சினைகளில் இரு கட்சிகளும் இணைந்து செயற்படுவது தொடர்பாகவும் சில நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடர்வது என்றும் தீர்மானித்துள்ளதுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு

(10ம் பக்கம் பார்க்க)

## 1999ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களுக்கு ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக 1999ம் ஆண்டு கோரப்பட்ட விண்ணப்பங்களின் பிரகாரம் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் 346 பேரின் பெயர் விபரங்கள் கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி கிடைத்ததும் நியமனம் வழங்கப்படும் என வடகிழக்கு மாகாண கல்விப்பண்பாட்டு அலுவல்கள்,விளையாட்டுத் துறை அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர் எம்.கே.எம்.கனிபா தெரிவித்துள்ளார். (த)

## நிமலராஜன் கொலை வழக்கு

## 5.மி.மீ துப்பாக்கிகளை பகுப்பாய்வு செய்ய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பாக ஈ.பி.டி.பி அலுவலகத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட 5.மி.மீ துப்பாக்கிகளை, நிமலராஜன் கொலை தொடர்பான தடயப்பொருளான ரவையுடன ஒத்துள்ளதா என்பதைப் பகுப்பாய்வு செய்யுமாறு யாழ்.நீதிவான் இ.த.விக்கினராசா யாழ்.குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் நிமலராஜன் தொடர்பான விசாரணை யாழ்.நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றபோதே நீதிவான் இ.த.விக்கினராசா இவ்வாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நேற்றைய விசாரணையின் போது குற்றப் புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த ரஞ்சித் டீ.சில்வா ஈ.பி.டி.பி அலுவலகத்தில் கைப்பற்றிய துப்பாக்கிகளை நீதி மன்றத்தில் சமர்ப்பித்தார். இதனையடுத்தே நீதிவான் அவற்றைப்பகுப்பாய்வு செய்யுமாறு உத்தரவிட்டதுடன்,அடுத்த மாதம் 27ம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும போது பகுப்பாய்வு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் ரஞ்சித் டீ சில்வாவிற்கு யாழ்.நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.(வ)

## அனுராதபுரத்தில் தீ விபத்து

## ஐந்து கடைகள் எரிந்து நாசம்

### ஒருவர் பலி; நால்வர் காயம்

(அனுராதபுரம்)

அனுராதபுரப் பகுதியில் உள்ள கடைத் தொகுதி ஒன்றில் நேற்றுக் காலை திடீரென ஏற்பட்ட தீவிபத்தினால் ஐந்து கடைகள் முற்றாக எரிந்துள்ளது.இதன் போது கடையில் இருந்த சிப்பந்தி ஒருவர் பலியானார். நால்வர் படுகாயமடைந்த நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அனுராதபுரத்தில் அமைந்துள்ள வங்கிக் கட்டடத் தொகுதியில் நேற்றுக் காலை 9.30மணியளவில் இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.இத் தீ விபத்தில் இரும்புக் கடை உட்பட

(10ம் பக்கம் பார்க்க)

## மணக்கும்பானில் ஆணின் சடலம்

(ஆனைக்கோட்டை)

மணகும்பான் சந்திக்கும் அராலிச் சந்திக்குமிடையில் உள்ள வயல் வெளியில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் தொடர்பாக பொது மக்கள் பொலிஸாரிடம் தகவல் கொடுததமையை அடுத்து மண்கும்பான் கிராமசேவகர் இ.யோகேஸ்வரன் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் சடலம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. (ந-201



மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நேற்று நடைபெற்ற அணிசேரா மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வருகை தரும் காட்சி.

## இந்தியப் பிரதமருடன் ஜனாதிபதி இன்று சந்திப்பு

(கொழும்பு)

மலேசியாவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் 13வது உச்சி மாநாட்டில் கலந்து கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இன்று இந்தியப் பிரதமர் அடல் பிஹாரிவாஜ்பாயை சந்தித்துப் பேசுவார் என்று ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திபின் போது ஐக்கிய தேசிய முன்னணி அரசின் செயற்பாடுகள் குறித்தும்,அரசு-புலிகள் சமாதான முயற்சிகள் குறித்தும் ஜனாதிபதி, இந்தியப் பிரதமருடன் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை ஜனாதிபதி நேற்று கியூபா ஜனாதிபதி பிடல் கஸ்ரோவுடன் பேச்சுக்கள் நடத்தியிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.(இ)

# தமிழரின் பாதுகாப்பு அரண் தமிழீழ விடுதலைப்புலிகளே

## சு.ப.தமிழ்ச்செல்வன் உரை



(பளை)

தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு அரண்களாக இருப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே இவ்வாறு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாட்டின் ஒன்று கூடல் நிகழ்வு நேற்று பளை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இப்பேராளர் ஒன்று கூடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையானது எமது இனத்தின், தேசத்தின் நீண்ட அர்ப்பணிப்பு மிக்க விடுதலைப் போராட்டத்திற்கு கிடைத்திருக்கும் அங்கீகாரமாகும். சுமார் 17ஆயிரத்துக்கும் மேற்பட்ட எங்களின் இளம் தலைமுறையை

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ்.வந்த ஆயர்களுடன் சரத் பொன்சேகா சந்திப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுப் பிற்பகல் ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்து ஆயர்களுடன் இரகசியப் பேச்சில் ஈடுபட்டார்.


இச் சந்திப்பில் யாழ்.ஆயர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் கொழும்புப் பேராயர் அதி வணக்கத்திற்குரிய ஒஸ்வோல்ட் கல மிக்ஸ், குருநாகல் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய றோமன் பீரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரகசியமாக இடம் பெற்ற இச் சந்திப்புக் குறித்து தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

இச் சந்திபின் போது ஊடகவியலாளர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை இதேவேளை இராணுவத் தளபதியுடனான சந்திப்புக் குறித்து யாழ்.ஆயர் இல்லத்தில் தொடர்பு கொண்ட போதும் தகவல் எதனையும் பெறமுடியவில்லை.(இ)





# உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

# CRICKET WORLD CUP 2003




## இன்றைய ஆட்டம்

**நியூசிலாந்து எதிர் பங்களாதேஷ்**
(கிம்பர்லி மைதானம்)
2.00 P.M

**இங்கிலாந்து எதிர் இந்தியா**
(டாபன் மைதானம்)
6.00 P.M

## 500வது விக்கெட்டை வீழ்த்திய வசீம் அக்ரம்

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பாகிஸ்தானின் வேகப் பந்து வீச்சாளர் வசீம் அக்ரம் 500வது விக்கெட்டை வீழ்த்திய முதலாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இவர் இந்தச் சாதனையை நெதர்லாந்து அணியின் நிக்ரனை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் நிகழ்த்தியுள்ளார்.

வசீம் அக்ரம் இதுவரை 354 போட்டிகளில் விளையாடி இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.டெஸ்ட் போட்டிகளில் 400க்கும் அதிகமான விக்கெட்டுக்களையும்,ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரில் 500 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார்.

இதன் மூலம் ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய ஒரே ஒரு வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார். (த-5)

## கென்ய அணியுடனான தோல்வி நினைத்துப் பார்க்க முடியாதது

### சனத் ஜெயசூரியா கவலை

உலக கிண்ண கிரிக்கெற் போட்டியில் நேற்று முன் தினம் நைரேபியில் நடைபெற்ற கென்யாவுடனான போட்டியில் இலங்கை 53 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இத்தோல்வி இலங்கை அணியின் கிரிக்கெற் வரலாற்றில் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகவுள்ளதாக இலங்கை அணித் தலைவர் சனத் ஜெயசூரியா கவலையுடன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இப்போட்டியில் எமது பந்து வீச்சுத் திறமையாக இல்லாதிருந்த போதிலும் கென்யா அணி 50 பந்துப் பரிமாற்ற நிறைவில் 9 இலக்குகளை இழந்து 210 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.ஆயினும் எமது துடுப்பாட்ட வீரர்களின் நிதானமின்மையையே இத்தோல்வி எடுத்துக் காட்டுகிறது. எமது மத்திய துடுப்பாட்ட வரிசை இவ்வாறு ஆடுமென நான் சிறிதளவேனும் எண்ணிப்பார்க்கவில்லை என்றார்.

நான் இதுவரை ஆடிய 13 வருடங்களில் 291 ஒருநாள் போட்டிகளிலும் 76 டெஸ்ட் போட்டிகளிலும் பங்கு பற்றியுள்ளேன்.ஆயினும் இத்தனை ஆண்டுகளில் கென்யா உடனான போட்டிபோல் என்றுமே எதிர் கொண்டதில்லை.இனிமேலும் எதிர் கொள்ளக் கூடாது என எண்ணுகின்றேன் எனக் கூறிய ஜெயசூரியா நாம் இனி நடை பெறவிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் தென்னாபிரிக்காவுக்கெதிரான போட்டிகளில் நிச்சயம் வெல்வோம் என உறுதிபடக் கூறியுள்ளார்.தற்போது "பீ பிரிவில இலங்கை மற்றும் கென்யா அணிகள் தலா 12 புள்ளிகளையும் மேற்கிந்தியத் தீவுகள் அணி 10ப் புள்ளிகளையும் பெற்ற நிலையில் தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து ஆகிய அணிகள் தலா 8ப் புள்ளிகளைப் பெற்ற நிலையில் உள்ளன.ஆயினும் கென்யா அணி இனிவரும் போட்டிகளில் பங்களாதேஷ் மற்றும் மேற்கிந்தித் தீவுகளை எதிர்த்தாடவுள்ளது.பங்களாதேஷ் அணியுடன் வெற்றி பெற்றால் சுப்பசிக்ஸ்"க்குச் செல்வதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

இதேவேளை கென்யா அணித் தலைவர் ஸ்ரீவ்ரிக்கொலோ கூறுகையில் ஓட்டங்களைக் குறைவாகப் பெற்றுவிட்டோம் என எண்ணினோம்.ஆயினும் எமது வீரர்களின் நேர்த்தியான பந்து வீச்சினாலும் சிறந்த களத்தடுப்பினாலும்,வெற்றி பெற்றுள்ளோம்.கொலின்ஸ் ஓடியாவேயின் திறமையாக பந்துவீச்சு எமக்கு வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளது. எனவும் சுப்பர்ஸிக்ஸ் எமக்கு தொலைவில் இல்லை எனவும் கூறினார். (த-5,55)

## இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இன்று முக்கியமான ஆட்டம்

இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையில் இன்று நடை பெறவுள்ள போட்டி மிகவும் முக்கியமானதொன்றாக அமைந்துள்ளது.இரு அணிகளும் அடுத்த சுற்றுக்கு(சுப்ப சிக்ஸ்"க்கு)தகுதி பெறுவதற்கு இன்றைய போட்டியே முக்கிமானது. இந்திய அணி இது வரை4போட்டிகளில் விளையாடி 3 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.சிம்பாவேயுடன் நடக்கவிருந்த போட்டியில் இங்கிலாந்து அணி கலந்து கொள்ளாததால் வெற்றிவாய்ப்பை இழந்தது. இதனால் இரு அணிகளுக்கிடையிலான இன்றைய போட்டி பெரும் சவாலாக அமைந்துள்ளது. இதேவேளைஇந்தியா, இங்கிலாந்து இரு அணிகளினதும் தலைவர்கள் இன்றைய போட்டியின் முக்கியத் துவம் என்ன என்பன பற்றித் தமக்குத் தெரியும் எனவும் அதன்படி தன்னம்பிக்கையுடனும் திறமையாகவும ஆடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர் .(5)

## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### பாகிஸ்தான் எதிர் நெதர்லாந்து

### பாகிஸ்தான்

50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்கள்

| வீரர்கள் | ஓட்டங்கள | பந்து வீசியவர்கள் | ஆட்டமிழுப்பு |
|---|---|---|---|
| உமர் | Run out | - | 48 (71) |
| அன்வர் | cஇஸ்மேஜர் | b டீலீட் | 25 (37) |
| ரஸாக் | cசிமிற்ஸ் | b பண்ஜ் | 47 (63) |
| ஹக் | lbw | b டீலீட் | 0 (2) |
| ஜேகானா | - | b லெவ்பேர் | 58 (59) |
| இலாகி | c ஸ"யனடெறன் | b பண்ஜ் | 5 (7) |
| லத்தீவ் | c பண்ஜ் | b ஸிபோ்லி | 24 (25) |
| அக்ரம் | -Run out | | 1 (4) |
| அக்தர் | not out | - | 26 (27) |
| யுனிஸ் | c&b | மோல் | 1 (2) |
| முஸ்ராக் | not out | - | 3 (3) |

உதிரிகள் –15

### பந்து வீச்சு - நெதர்லாந்து

| | | | |
|---|---|---|---|
| ஸிபோ்லி | 10 | 48 | 1 |
| லெவ்பேர் | 10 | 39 | 1 |
| டிலீட் | 10 | 53 | 2 |
| ரூஸ்ற் | 2 | 18 | - |
| இஸ்மேஜர் | 10 | 35 | - |
| பன்ஜ் | 4 | 27 | 2 |
| மோல் | 4 | 24 | 1 |

### நெதர்லாந்து

39.3ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரதம் | - | b அக்ரம் | 0 (9) |
| ஸிபோ்லி | c ரஸாக் | b அக்தர் | 09 (24) |
| ஸ"ய்ண்டெறன்ட் | lbw | b யுனிஸ் | 8 (17) |
| நூர்வித் | c லத்தீவ் | b அக்ரம் | 7 (7) |
| டி லீட் | c அக்தர் | b முஷ்ராக் | 15 (35) |
| பண்ஜ் | c லத்தீவ் | b ரஸாக் | 31 (60) |
| ரூஸ்ட் | c லத்தீவ் | b அக்தர் | 22 (30) |
| மோல் | - | b அக்தர் | 13 (24) |
| இஸ்மேஜர் | lbw | b அன்வர் | 0 (2) |
| லெவ்பேர் | not out | | 4 (14) |
| ஸ்மிற்ஸ் | lbw | b அக்ரம் | 7 (21) |

உதிரிகள் –40

### பந்து வீச்சு - பாகிஸ்தான்

| | | | |
|---|---|---|---|
| வசீம் அக்ரம் | 8.3 | 24 | 3 |
| அகதர் | 7 | 26 | 3 |
| வஹாார்யுனிஸ் | 6 | 19 | 1 |
| முஸ்ராக் | 8 | 32 | 1 |
| ரஸாத் | 6 | 23 | 1 |
| அன்வர் | 4 | 15 | 1 |



வசீம் அ[illegible] தனது 500வது விக்கெட்[illegible] வீழ்த்திய போது பாகிஸ்தான் அணியினரினதும், அக்ரத்தினதும் ம[illegible]ப் படத்தில் [illegible]ணலாம்.

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து

**வலம்புரி**

நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

போட்டியில் பங்கு பற்றுங்கள் பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

கிரிக்கெற் பரிசுப் போட்டி

வலம்புரி

இல 15, வெள்ளாந்தெரு

யாழ்ப்பாணம்.

உங்கள் விடையுடன் தவறாது

இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003

முழுப்பெயர் : ----------

முகவரி : ----------

தே.அ.அ.இல : ----------

கையொப்பம்:----------

அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி

மார்ச் 15, 2003

## விஷேட ஆணையாளரை தடுத்த வலி.வடக்கு பி.சபை ஊழியர்கள்

(ஏழாலை)

வலி வடக்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளர் வைரமுத்துவை அவரது அலுவலகத்திலிருந்து வெளியேற விடாமல் மின்சார சபை ஊழியர்கள் நேற்று முன்தினம் மாலை சில மணிநேரம் தடுத்து வைத்தனர்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. கடந்த 10 மாதங்களாக தமக்கு வழங்கப்படாத சம்பளத்தை வழங்குமாறு கோரியே மின்சார சபை ஊழியர்கள் 7 பேர் ஆணையாளரின் அலுவலக கதவைப் பூட்டி அவரைத் தடுத்துவைத்தனர்.

விடயத்தை அறிந்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் ஊழியர்கள் 7 பேரையும் ஆணையாளரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை நடத்தினர். விசாரணைகளின் முடிவில் எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் ஊழியர்களின் சம்பளத்தை வழங்குமாறு பணித்தனர்.

வலிவடக்கு பிரதேச சபையினால் 1997 ஆம் ஆண்டு 10 பேர் மின்சார சபை ஊழியர்களாக உள்வாங்கப்பட்டனர். கடந்த வருடம் மார்ச் மாதத்துடன் இவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவை பிரதேச சபை நிறுத்தியது. இதனால் மின்சார சபையூடாக தம்மை உள்வாங்கும்படி அவர்கள் கோரிக்கை விடுத்தனர். அவர்களில் 3 பேர் உள்வாங்கப்பட்ட போதும் ஏனைய 7 பேரும் உள்வாங்கப்படவில்லை. இதன் எதிரொலியாகவே ஆணையாளர் தடுத்து வைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை, மேற்படி 10 மாதத்திற்குரிய சம்பளம் வழங்கப்படாதது குறித்து மனிதஉரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-12)

### குமாரபுரம் படுகொலை

## வழக்கு விசாரணை திருமலை மேல்நீதிமன்றில்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற குமாரபுரம் படுகொலை வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் அல்லது ஜுன் மாதம் திருகோணமலை நீதிமன்றத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் இவ்வழக்கை ஜுரர்கள் முன்னிலையில் சாதாரண முறையில் விசாரிக்காமல், ட்ரயல் அற் பார் முறையில் விசாரிக்க வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் மைலந்தனைப் படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணை சிங்களம் பேசும் ஜுரர்கள் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு சந்தேக நபர்கள் அனைவரும் சுற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னணியிலேயே இது பற்றித் தமிழ்ப் பிரமுகர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அது மட்டுமன்றி சபையின் முன், படையினர் சம்பந்தப்பட்ட படுகொலைச் சம்பவங்கள் விசாரிக்கப்படும் போது குறித்துக் கூற முடியாத காரணங்களினால் நீதியின் பயன்கள் கிடையாமற் போவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த ரெலோ முதல்வர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா, உடத்தலவின்ன, மிருசுவில், பிந்துனுவெவ போன்ற வழக்குகள் ட்ரயல் அற் பார் முறையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை ஞாபகப்படுத்தினார். (இ)

## விளையாட்டில் சாதனை புரிவோர் வாழ்வில் வெற்றி பெறுவர்

### மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்

(பருத்தித்துறை)

"கல்வியுடன் விளையாட்டுத் துறைகளிலும் சாதனை புரிவோர் வாழ்க்கையில் வெற்றி பெறுவர்" விளையாட்டுத் துறையில் முன்னணியில் திகழ்வோர் சர்வதேச ரீதியில் புகழ்பெறுவார்கள். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியிலே பிரதம விருந்தினராக கலந்து கொண்டு விளையாட்டுக்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம் குறிப்பிட்டார்.

அதிபர் திருமதி செல்வி மலர் சுந்தரேசன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி விளையாட்டுப் போட்டியில் திருமதி மகாலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இப்பாடசாலை பல்வேறு துறைகளிலும் வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்திலும், அகில இலங்கை ரீதியிலும் சாதனைகளை நிலைநாட்டி வருவது பாராட்டப்படவேண்டியதாகும்.

ஏனைய பாடசாலைகளைப் போலல்லாது இப்பெண்கள் பாடசாலை சொல்லொணாக்கஷ்டங்களுக்கு முகங்கொடுத்து செயற்பட்டு வருகின்றது.

சிறந்த செயற்பாட்டினால் இப்பாடசாலை மாணவிகள் சாதனைகளை நிலைநாட்டி வருவது மிக மகிழ்ச்சிக்குரியதாகும் இந்நடவடிக்கைகள் இப்பாடசாலையின் தரத்தை உயர்த்த வழிவகுக்கும்.

ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் இணைந்து சிறப்பாக செயற்பட்டு இப்பாடசாலை மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதோடு பாடசாலையின் வளர்ச்சிக்கும் வழிவகுக்க வேண்டும்.

இன்று உலகெங்கும் பெண்கள் சாதனைகளை நிலைநாட்டி முன்னணியில் திகழ்ந்து வருகின்றனர். இப்பாடசாலை மாணவிகளும் ஒழுக்கம், கட்டுப்பாடுகளில் உயர் நிலையில் நின்று சமூகத்தில் முன்னணியில் திகழ்ந்து வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும்.

சமூகத்தில் முன்னணியில் திகழுபவர்களினாலேயே நாட்டை வழிநடாத்திச் சென்று சுபீட்சத்தைக் காண வழிவகுக்க முடியும் என்று குறிப்பிட்டார். (உ-52)

## ஒப்பந்த நடைமுறைகளை உரியபடி அமுல்படுத்துக!

### சமாதான நீதிவான்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பூரணமாக நிறைவேற்ற தகுந்த நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு கோரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு யாழ். மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாகி ஒரு வருடமாகியும் யாழ். மாவட்டத்தில் இவ் ஒப்பந்த நடைமுறையில் திருப்திகாண முடியவில்லை.

சமாதான வாழ்வு தமிழ் மக்களாகிய எமக்கு இன்றுவரை கிட்டவில்லை என்று அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க மற்றும் சமாதான அமைப்புக்கள் என்பவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ)

## கணனிகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு நேற்று மூன்று கணனிகளை அன்பளிப்புச் செய்துள்ளார்.

உயர் தொழில் நுட்ப நிறுவனப் பணியாளர் ராஜரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நிறுவன மாணவர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர். (உ-4)

## அம்பாறை அணி மண் கவ்வியது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நடைபெற்று வரும் தமிழீழ தேசிய விளையாட்டு விழாவின் நேற்றைய மென்பந்து அரையிறுதிப் போட்டியில் திருமலை அணி ஒரு ஓட்டத்தினால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருமலை அணி 14.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அம்பாறை அணி 15 ஓவர்கள் முடிவில் 8 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

வவுனியா-மட்டக்களப்பு அணிகளுக்கிடையிலான அரையிறுதி மென்பந்துப் போட்டியில் வவுனியா அணி 15 ஓவர்கள் முடிவில் 6 விக்கட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 9.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. (த)

## மெய்வன்மைப் போட்டிகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், துடுப்பாட்டம் மற்றும் உடற்பயிற்சி போட்டிகள் எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.அரசரத்தினம் அறிவித்துள்ளார். (உ-117)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகம், பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இம்முறை ஸ்ரீ கல்கி சுவர்ண அமைப்பகத்தைச் சேர்ந்த ஸ்ரீ ராஜேஸ் பகவத் ராஜாஜீ "அன்றாட வாழ்வில் ஆன்மீகம்" என்னும் விடயம் பற்றி சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (உ-10)

## விளையாட்டுப் போட்டி

(தனங்கிளப்பு)

கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (உ-7)

* * * *

(மண்கும்பான்)

சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் திருமதி லூ.மகேஸ்வரன் தலைமையில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜும் சிறப்பு விருந்தினர்களாக மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநரான வண.பிதா.சி. ஜெயக்குமார் அடிகளார், யாழ்ப்பாண பிரதேச செயலக சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.கியூமன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-55)

### திருமலை சிறான் கூட்டத்தில்

## இரு பிரதான விடயங்கள் குறித்து ரிசாத் எம்.பி.பிரஸ்தாபிப்பார்

(புத்தளம்)


புத்தளத்திலிருந்து எலுவன் குளத்தினூடான மன்னாருக்கான பாதைப் புனரமைப்புப் பணிக்கென 700 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும், அதனைப் பெறுவது தொடர்பில் வட-கிழக்கு அவசர புனரமைப்புக் குழுவின் உப குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்படப் போவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், உப குழுவின் அரச தரப்பு உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

27, 28 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவுள்ள சிறான் உபகுழுக் கூட்டத்தில் இரு பிரதான திட்டங்களை சமர்ப்பிக் கவுள்ளதாக மேலும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன், மன்னார் வியாலடி நீர்ப்பாசனத் திட்டத்தை புனரமைப்புச் செய்வதன் மூலம், பாலக்குளி, கரடிக்குளி, மரிச்சுக்கட்டி, முள்ளிக்குளம் பகுதியில் விவசாயத்தை மேற் கொள்ள முடியுமென்பதையும் அக்கூட்டத்தில் சுட்டிக்காட்டவுள்ளதாக கூறியுள்ளார். (உ)




நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கருணாநிதி உரையாற்றுவதையும், கல்லூரி அதிபர் எஸ்.சேதுராஜா, யாழ் பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் ரீ.கலாமணி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

படம் : பருத்தித்துறை நிருபர்



ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் முன்னாள் உடுவில் கல்விப்பணிப்பாளர் அ.தற்பரன் உரையாற்றுவதையும், சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் சுவாம்பிள்ளை ஹென்றி, பாடசாலை அதிபர் ஆகியோர் அமர்ந்திருப்தையும் படத்தில் காணலாம்.

படம் : ஏழாலை நிருபர்





யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு நேற்று 3 கணனிகளை அன்பளிப்புச் செய்தார்.


அவ் வைபவத்தில் பிடிக்கப்பட்ட படங்கள் இவை.

படங்கள் : க.பவன்

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்
### வினா இல : 05

✳ 1ம் 2ம் வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றிற்கு தீமை ஏற்படாதவாறு மனிதனால் பெற்றுக் கொள்ளத்தக்க நன்மையினை குறிக்கும் விடையின் கீழ்க் கோடிடுக.

01. 
1) விறகு
2) காய், கனி
3) நிழல்
4) இலை, குழை

2) 
1) பால்
2) இறைச்சி
3) உழவு வேலை
4) எரு


✳ 4ம் 5ம் வினாக்கள் கீழ்வரும் பந்தியுடன் தொடர்பானது. பந்தியைக் கவனமாக வாசித்து சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

**அது ஒரு அழகிய கிராமம். அங்கு வாழும் மக்கள் அமைதியும் சமாதானமும் உடையவர்கள். அவர்கள் மொழியால், சமயத்தால் வேறுபட்டவர்களாக இருந்த போதிலும் எல்லோரும் மனிதர்கள் என்னும் உணர்வுடன் வாழ்ந்து வருகின்றனர்.**

03. கீழே தரப்பட்டுள்ள வழிபாட்டுத் தலங்களின் தொகுதியுள் அக்கிராமத்திற்கு பொருத்தமான வழிபாட்டுத் தலத்தொகுதி எது?
1) பிள்ளையார் கோயில், முருகன் கோயில், வைரவர் கோயில்
2) பள்ளிவாசல், விகாரை, தேவாலயம், கோயில்
3) பிள்ளையார் கோயில், பள்ளிவாசல், அம்மன் ஆலயம், வைரவர் கோயில்

04. அக்கிராமத்தில் உள்ள 4 நண்பர்களின் பெயர் விபரம் வருமாறு. அவர்கள் நண்பர்களான போதிலும் தமது தாய் மொழியில் உரையாடுவது இல்லை. பொது மொழியாகிய ஆங்கிலத்திலேயே உ.ரையாடுவது வழமை. அவர்களது பெயர்களுக்கு பொருத்தமானது.
1) கதிரவேல், சண்முகம், தம்பிராசா, முருகையா
2) பாலையா, முருகையா, சுதுமாத்தயா, ரணசிங்கா
3) பண்டார, அபூபக்கர், யேசுராசா, முருகையா

05. கீழ்வரும் உருக்களில் $^1/_2$ பங்கிலும் அதிகமான பகுதி நிழல்படுத்தப்படாத உரு எது?



(1) (2) (3) (4)

06. கீழ்வரும் உருக்களில் நேர்கோட்டால் ஆக்கப்படாத உரு.



(1) (2) (3) (4)

07. 
இவ்வடையாளத்தை அவதானிக்கத்தக்க இடம்.
1) வைத்தியசாலை
2) செஞ்சிலுவைச் சங்கம்
3) அம்புலன்ஸ்
4) மேற்சொன்ன இடங்கள் மூன்றிலும்

✳ சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

08. கண்ணாவின் தற்போதைய வயது 15 ஆண்டுகள் ஆகும். எனவே 5 ஆண்டுகளுக்கு முன்னர் கண்ணாவின் வயது என்ன?
..........................................................................................

09. இன்னும் 3 ஆண்டுகளின் பின்னர் கண்ணாவின் வயது என்ன?
..........................................................................................

10. இன்னும் 3 ஆண்டுகளின் பின்னர் உள்ள கண்ணாவின் வயதின் $^1/_3$ பங்கு கண்ணாவின் தம்பி மஞ்சுவின் தற்போதைய வயது ஆகும். எனவே மஞ்சுவின் தற்போதைய வயது என்ன?
..........................................................................................

✳ கீழ்வரும் கணித உருக்களை அவதானிக்குக.



11. இவ்வுருக்களில் அதிக எண்ணிக்கையில் காணப்படுவதும் ஒரே வகையானதுமான உருவின் பெயரை எழுதுக?
..........................................................................................

12. நீளம் பாய்தல் போட்டி ஒன்றில் 5 மாணவர்கள் பாய்ந்த நீளங்கள் வருமாறு;
**வரன் ~ 190cm மஞ்சு ~ 175cm கண்ணா ~ 200cm**
**ரமணா ~ 180cm ராகவன் ~ 188cm**
இவர்களில் முதலாவதாக வந்த மாணவனின் பெயரை எழுதுக?
..........................................................................................


1 கிலோ கிராம் தேயிலையை மூன்று மாணவர்கள் பின்வருமாறு பொதி செய்ய எண்ணினார்கள்.
சாம்பவி :- 25 கிராம் கொண்ட பைக்கற்றுக்கள்
பவித்திரா :- 75 கிராம் கொண்ட பைக்கற்றுக்கள்
சுமங்கலி :- 125 கிராம் கொண்ட பைக்கற்றுக்கள்


13. இவர்களில் மிகவும் குறைந்த பொதிகளைப் பெறுபவர் பெயரை எழுதுக?
..........................................................................................
14. இவர்களில் அதிக எண்ணிக்கையான பொதிகளைப் பெறுபவர் பெயரை எழுதுக?
..........................................................................................
15. பொதியாக்கும் போது தேயிலையை மீதமாக பெறுபவர் பெயரை எழுதுக?
..........................................................................................

✳ கோலத்தை இனம் கண்டு இடைவெளியை நிரப்புக.

16.
5 ▢ 25 7 ▢ 49 9 ▢ 81 11 ▢ 121

17. 


18. 


19) 



20) மு. ப. 6.00 → 0600 மணித்தியாலம்
மு.ப11.25 → 1125 மணித்தியாலம்
பி.ப12.15 → 1215 மணித்தியாலம்
பி.ப 3.00 → ..... மணித்தியாலம்

✳ கீழே உள்ள பகுதியை வாசித்து அதன் கீழ்த்தரப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

01.02.2003
நான் நலமேயுள்ளேன். உங்கள் சுகத்திற்காக இறைவனை வேண்டுகின்றேன். கடல் கடந்து வாழும் எனக்கு உங்கள் நினைவே பாதுகாப்பு. ஆறுதல்.....

21. மேலே விபரிக்கப்பட்டுள்ளது.
1) கதை 2) கடிதம் 3) தந்தி 4) கட்டுரை
22. இதை எழுதியவர் வாழ்வது
1) உள்நாட்டில் 2). தாயுடன் 3) வெளிநாட்டில் 4) கடற்கரையில்
23. இது எந்த மாதத்தில் எழுதப்பட்டுள்ளது.
1) தை 2) மாசி 3) வைகாசி 4) ஆவணி

✳ 24 - 25 வரையிலான வினாக்களுக்கு கீழ்வரும் தொகுதியை அவதானித்து சரியான விடைக்குரிய இலக்கத்தின் கீழ்க்கோடிடுக.




*சிக்கலான பொறி ஒன்றினை இயக்கும் தொகுதி ஒன்று அருகே தரப்பட்டுள்ளது.*

24. A ஆனது இங்கு காட்டப்பட்டுள்ள திசையில் சுழலும் போது B ஆனது சுழலும் திசை
1) ↻ 2) ↺ 3) கூறமுடியாது


25. இங்கு ஒரே திசையிலேயே சுழலும் அமைப்புக்கள்
1) B,C 2) A,C 3) A,B

✳ 26-27 வரையான வினாக்களிற்கு பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் இடம் பெறும் சில செயற்பாடுகள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்கமைத்து சரியாக எழுதப்பட்டுள்ள விடையினை தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

26. 1) வீரர்கள் கோட்டில் வந்து நின்றனர்
2) வேகமாக ஓடத் தொடங்கினர்
3) வீரர்கள் ஆயத்தமாக மைதானத்தில் வந்து நின்றனர்
4) ஆரம்பக் கோட்டிற்கு வரும்படி கட்டளையிடப்பட்டது.
5) ஓட்டத்தை ஆரம்பிக்கும் வேட்டொலி கேட்டது.
1) 5, 2, 3, 4, 1 2) 2, 4, 3, 1, 5 3) 4, 2, 3, 1, 5 4) 3, 4, 1, 5, 2

27. 1) பின்னர் இல்லங்களின் அணிவகுப்புத் தொடங்கியது
2) அவர்கள் படைத் தளபதிகள் போல காட்சியளித்தனர்
3) முதலில் பிரதம விருந்தினர் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்
4) விளையாட்டுப் போட்டி ஆரம்பமாகியது
5) அணித்தலைவர்கள் இல்லக் கொடியை ஏந்தியவாறு சென்றனர்
1) 5, 4, 2, 3, 1 2) 4, 3, 1, 5, 2 3) 3, 2, 1, 4, 5 4) 3, 5, 4, 2, 1

✳ 28-30 வரையான வினாக்களில் தாயக்கட்டை ஒன்றின் மூன்று வெவ்வேறு நிலைகள் காட்டப்பட்டுள்ளன. தாயக் கட்டையானது அதன் அறு முகங்களிலும் நீலம், சிவப்பு, கறுப்பு, வெள்ளை, மஞ்சள், பச்சை என்னும் வித்தியாசமான நிறங்களையுடையது. இவற்றை நன்கு அவதானித்து சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.




நிலை I நிலை II நிலை III

28. சிவப்பு முகத்திற்கு எதிராக உள்ள முகத்தின் நிறம் என்ன? (...............)
29. மஞ்சள் முகத்திற்கு எதிராக உள்ள முகத்தின் நிறம் என்ன ? (...............)
30. நிலை III ஐ பச்சை நிறம் மேலே வரத்தக்கதாக உருட்டினால் மறையும் நிறம் எது? (...............)

✳ 31- 32 வரையான வினாக்களில் முதலாவதாகத் தரப்பட்டுள்ள உருக்களுடன் பொருந்தும் விடையினை தெரிவு செய்க.

31. 
இவ்வுருவில்
1) முக்கோணங்கள் உண்டு
2) வட்டங்கள் உண்டு
3) சதுரங்கள் உண்டு


32. 
அருகேயுள்ள படத்தினைக் குறிப்பிடப் பொருத்தமான சொல்
1) A nice Doll 2) A beautiful face
3) A toy stall 4) My Friend

✳ 33-34 வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

33. **Lx + XL + XXIX + XIX**
என்பதன் பெறுமதியை இந்து அராபிய இலக்கத்தில் எழுதினால்
1) 100 2) 148 3) 129 4) 68

34. 

இவ்வாறான 2 பொம்மைகளின் விலை யாது?
1) Hundred rupees
2) Two Hundred rupees
3) Five Hundred rupees
4) Six Hundred rupees

35. 
இவ்வுருக்கள் யாவற்றையும் ஒன்றாக்கி இணைப்பதன் மூலம் பெறத்தக்க உரு
1) கனவுரு 2) சதுரமுகி
3) நான்முகி 4) முக்கோணி

36. பிழையான கோலமுள்ள எண் தொடர்
1) 1,3,5,7,9 2) 1,3,6,10,15 3) 2,4,9,16 4) 1,2,3,4,5
37. மண்ணும் நீரும் கலந்துள்ள கலவையிலிருந்து மண்ணை வேறாக்க ஏற்ற முறை
1) வடித்தல் 2) ஆவியாக்கல்
3) அடையவிடல் 4) கலக்கல்
38. நான்காக மடித்து கீழே உள்ளவாறு துளையிடப்பட்ட கடதாசியை விரிக்கும் போது அது காணப்படும் நிலைமையைச் சரியாகக் காட்டுவது



39 தாவரங்கள் பச்சை நிறமாக வளர்வதற்கு சூரிய ஒளி அவசியம். சூரிய ஒளி அற்ற தாவர இலை மஞ்சள் நிறமாகும். என்னும் கூற்றுக்கு அமைய கற்களின் கீழ் நீண்ட நாட்கள் காணப்படும் தாவரம் என்ன நிறமுடையதாக இருக்கும் என எழுதுக?
..............................

40. 50 கிராம் தேயிலை ரூபா 10.00 ஆகவும் 250ml பால் ரூபா 14 ஆகவும் வாங்க முடியுமெனின் 750g தேயிலையும் 750ml பாலையும் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?
..............................

**5ம்தர புலமைப்பரீட்சை**
**வினாத்தாள் - 5**

மாணவர் முழுப்பெயர்.........................................
பாடசாலையின் பெயர் :.........................................
வீட்டின் முகவரி:.........................................
மாணவர்களே உங்கள் விடைகளை 05.03.2003 க்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் இக்கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி வலம்புரி
கல்விப் பகுதி
15 வெளி...

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்
### வினா இல : 03

**அதிகூடிய பெறுபேற்றை பெற்ற மாணவர்களின் பெயர்கள்**

1. எஸ். சரனிகா - நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
2. ஆர். அனுதா - இந்து ஆரம்பாடசாலை
3. கே. திலக்ஷன் - நுணாவில் அ.த.க பாடசாலை
4. எஸ். கிரிஷா - மாணிக்கவாசகர் வித்தியாலயம்
5. ரி. சயேந்தினி - நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
6. கே. லம்போதரன் - இந்து ஆரம்பபாடசாலை
7. பி. லதுஷா - இந்து ஆரம்ப பாடசாலை
8. எஸ். சிவகரன் - சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்
9. கே. கிருஸ்யாயினி - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
10. எஸ். கெஜரூபன் - இந்து த.க. பாடசாலை
11. எஸ். சர்வகா - கந்தரோடை தமிழ் கந்தைய வித்தியாலயம்
12. வி. துஷ்யந்தன் - நயினை நகாபூசணி வித்தியாலயம்
13. ஆர். சேந்தன் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
14. ஆர். அபியுகா - புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
15. எஸ். கீர்த்திகா - புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
16. வி. ஹேசிகா - புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
17. ரி. அகர்சனன் - இந்து ஆரம்ப பாடசாலை
18. எஸ். தேவகி - துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
19. பி. டினேஸ் - துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
20. ரி. கீர்த்திகா - கோண்டாவில் இந்து ம.வித்தியாலயம்
21. ஆர். யதுஷன் - இந்து ஆரம்ப.பாடசாலை
22. எஸ். தனேஷன் -
23. வி. சிந்துஜா - நடராஜா இரமலிங்கம் வித்தியாலயம்
24. எம். சயந்தினி - நாவலர் மகாவித்தியாலயம்
25. எஸ். தனுஸ்ரிக்கா - இந்து ஆரம்ப பாடசாலை
26. வி. அதிதரன் - நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
27. எஸ். மேனுஷா - நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
28. எஸ். அபிநயா - சுண்டுகுளி மகளிர் கல்லூரி
29. வி. ஐஸ்வர்யா - அ. மெ. மி. வித்தியாலயம்
30. கே. சுதர்சினி - நல்லூர் இ.த. பெ. பாடசாலை
31. எம். பானுஜன் - புற்றளை மகா வித்தியாலயம்
32. எஸ். லவணியா - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
33. பி. நந்தினி - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
34. எஸ். ஜெயபாரதி - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
35. ஏ. கோபிகா - மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்
36. ஆர். சகானா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
37. எஸ். சோபிகா - கந்தரோடை தமிழ்கந்தைய வித்தியாலயம்
38. ஆர். வினுசா - மல்லாகம் கனிஸ்ட வித்தியாலயம்
39. கே. நிருஜி - மிருசுவில் அ.த.க. பாடசாலை
40. எஸ். மனோஜிதன் - கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
41. ஜி. கௌதமன் - தட்டாதெரு மெ.மி.த.க.பாடசாலை
42. ரி. வைஷ்ணவி - ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை
43. பி. ஆரண்யா - இந்து ம.ஆ. பாடசாலை
44. எஸ். துளசிகா - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
45. ரி. பிரியந்தி - கரவெட்டி மகா வித்தியாலயம்
46. எஸ். கெறிக்ஷன் - புனித பத்திரிசியார் கல்லூரி
47. எஸ். றெக்னோ - கட்டுடை சைவ வித்தியாலயம்
48. எஸ். அம்புஜன் - இந்து ஆரம்ப பாடசாலை
49. எஸ். விஸ்ணுகரன் - இராமநாதன் கல்லூரி
50. ஆர். கிரிஷாந் - மத்திய கல்லூரி
51. ஜே. லவிஜென் - அச்சுவேலி மத்திய கல்லூரி
52. ஆர். மதனிகா - வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
53. ஆர். திவாகர் - வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
54. பி. யோபிகா - வல்வை சிவகுரு வித்தியாலயம்
55. பி. சந்திரா - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
56. பி. ஜோதிகா - வல்வை சிவகுரு வித்தியாலயம்
57. எஸ். நிர்ஜா - வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
58. கே. கஜன் - பண்ணாகம் மெ.ம.வித்தியாலயம்
59. ஆர். ஜெனிபன் - நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
60. பி. சர்மிளா - நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
61. வி. பிரியா - பொலிகண்டி த.க. பாடசாலை
62. கே. கணபாலன் - -
63. எஸ். கயனி - நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
64. வி. சேரகுலன் - கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை
65. எம். நாகதுஷ்யந்தி - வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்
66. ஜெ. சுகிர்தா - திருக்குடும்ப கன்னியர் மடம்
67. கே. அர்சுனன் - றிபேக்கல்லூரி
68. பி. சிவருக்ஷி - இந்து ஆரம்ப பாடசாலை
69. எஸ். கலிஸ்ரா - சென்பீற்றர் வித்தியாலயம்
70. ஜெ. பிரியந்தன் - புற்றளை மகா வித்தியாலயம்
71. ரி. ரூசிகா - இணுவில் மத்திய கல்லூரி
72. கே. கரிசினி - நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்
73. ஜெ. சுஜந்தன் - இந்து ஆரம்ப பாடசாலை
74. ரி. கபிலன் - பரியோவான் கல்லூரி
75. ஆர். நிரோஜினி - றோ.க.பாடசாலை
76. பி. வனஜா - வல்வை விநாயகர் வித்தியாலயம்
77. ரி.சுஜிக்கா - சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்
78. கே. மகிந்தன் - கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்
79. எஸ் சிவசாந்- தம்பசிட்டி மெ.மி.பாடசாலை
80. ஆர். துர்க்கா - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
81. வி. கிதூஜன் - விவேகானந்த வித்தியாலயம்
82. எஸ். சஜேந்திரன் - புனித பத்திரிசியார் கல்லூரி
83. யு. கோபிதா -
84. எஸ். றஜித்கும்மார் - கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை
85. எஸ். பிரணவன் - ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை
86. பி. கோகிலன் - மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்

### வினாத்தாள் - 03 விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01.D | 02.E | 22. புகையிரத நிலையம் | |
| 03.F | 04. C | 23. துறைமுகம் | |
| 05.A | 06. ரூபா 30.00 | 24. பேருந்து நிலையம் | |
| 07. ரூபா 625/- | 08. ரூபா 24/- | 25. துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | |
| 09. ரூபா 7.00 | 10. ரூபா 6.00 | | |
| 11. (2) | | 26. 82 | 27. 2 |
| 12.(3) | | 28. 3 | 29. 4 |
| 13. (2) | | 30. 200 | 31. 24 |
| 14. (2) | | 32. 12 | 33. 20 |
| 15. (3) | | 34. 13 | 35. 10 |
| 16. 2,4,6 | | 36. (5) | 37. (3) |
| 17. 7,8 | 18. 9,10 | 38. (4) | 39. (3) |
| 19. 12 | 20. 46 | 40. (2) | |
| 21. விமான நிலையம் | | | |

## மரம் நடுகைப் பணி ஆரம்பம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் அமைக்கப்பட்டுள்ள மரம் நாட்டு இயக்கக் குழு தனது மர நடுகைப் பணியை கடந்த வாரம் ஆரம்பித்துள்ளது.

நெடுந்தீவு மேற்கு, கிழக்குப் பகுதிகளை உள்ளடக்கிய வீதி ஓரங்களில் பூவரசு, மலைவேம்பு, வேம்பு, ஆல் போன்ற மரங்கள் இவ்விதம் நடப்பட்டு வருகின்றன. (உ-117)

## அரசுக்கு எதிராக பிக்குமாரை ஒன்றுதிரட்ட திட்டம்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கை என்ற பெயரில் நாட்டைப் புலிகளுக்கு தாரைவார்ப்பதாகக் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்முகமாக தேசத்தைப் பாதுகாக்கும் பிக்கு மார் முன்னணி கண்டி தலதா மாளிகைக்கு முன் பிக்குமாரை அணிதிரட்டவுள்ளது.

அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான நடவடிக்கைகளாலே இந்நிலை ஏற்பட்டிருப்பதாக குற்றம் சாட்டும் இம்முன்னணி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் நாடளாவிய ரீதியல் பிக்குமாரை ஒன்று திரட்டவுள்ளது. (உ-3)

## அவசர சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவர்கள் அனைவருக்குமான அவசர சந்திப்பு ஒன்று இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் மண்டப முன்றலில் நடைபெறவுள்ளது. (உ)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(சுண்டுக்குளி)

ஈச்சமோட்டை விளையாட்டுக் குழுவின் நடப்பாண்டிற்கான நிர்வாகசபைத் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். உதை பந்தாட்டச் சஙகப் பணிமனையில் இடம்பெற்றது.

தலைவராக மீண்டும் கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம், உபதலைவராக ச. தவநேசன்,செயலாளராக ஏ.யூட் குமார், பொருளாளராக ரி.பி. விஜயசிங்கம், உப செயலாளராக ஏ.சுரேந்திரன் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களாக கே.நெல்சன், எல்.ஏ. வி.பிறீமன்,கிங்ஸ்லிநரேந்திரன்,ஆர். றொபின், எஸ்.நிகால் ஆகியோருமகணக்காய்வாளராக சி. ஜே.அல்பிரட்டும்தெரிவு செய்யபபட்டனர். (உ-110)

## சந்தேகநபர்கள் கடத்தப்பட்டனர்

(சிலாபம்)

சிலாபத்தில் சட்டவிரோதமான முறையில் மதுபான உற்பத்தியில ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களை அப்பகுதி அரசியல்வாதி ஒருவர் பலவந்த மாக மீட்டுச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, சட்டவிரோதமான முறையில் 12 மதுபான நிலையங்களை நடத்தியுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு போதைவஸ்து தடுப்புப்பிரிவினர் இவர்களை கைது செய்தனர்,

இந்நிலையில், இச்சம்பவம் நடந்து சிறிது நேரத்தில் சிலாபத்தைச் சேர்ந்த அரசியல் வாதியொருவர் அங்குவிரைந்து மேற்படி 6 நபர்களையும் பலவந்தமாக மீட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-10)

## இசைநாடா வெளியீடு

(கொழும்புத்துறை)

வவுனியா அமலமரித்தியாகிகள் சபையின் கலைத்தொடர்பு நிலையத்தினர் "நீரேஎன் ஆனந்தம்" என்ற இசைநாடாவினை அண்மையில் வெளியிட்டுள்ளனர்.

அமரர் அதிரியான் ஜோசப் அடிகளால் எழுதப்பட்ட இப்பாடல், திருப்பலி மற்றும் திருவிழாக்களில் பாடுவதற்கு ஏற்றவை என தெரிவிககப்படுகின்றது. (உ-51)

# போரினால் பாதிப்புற்ற சிறுவர் பற்றிய ஆய்வு
## யுனிசெவ் மேற்கொள்கிறது

(காரைநகர்)

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர் மற்றும் பெண்களின் நிலைபற்றிய அடித்தள ஆய்வு ஒன்று யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

யுனிசெவ் நிறுவனமும், இலங்கை மன்றக் கல்லூரியும் இணைந்து இவ் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக ஆய்வுக்கான உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டு வினாக் கொத்து முறையில் படிவம் தயாரிக்கப்பட்டு இவ ஆய்வு மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. (உ-246)

# தமிழ்மொழி தினப் போட்டி மார்ச்1-31வரை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடத்திற்கான தமிழ்மொழித் தினப் போட்டி மார்ச் மாதம் முதலாம் தகதி முதல் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடைபெறவுள்ளன.

இது குறித்த சுற்றுநிருபம் வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளாரினால் சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்திற்கான தமிழ் மொழித் திறன் விருத்திப் போட்டிகள் வழமை போல் பாடசாலை, வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற நிலைகளில் கொண்டாடப்படும் எனவும் ,

நிகழ்ச்சி ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் 1999.2000,2001, 2002, ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட தமிழ்மொழித்தின தேசிய சுற்றுநிருபத்திற்கமைவாக செயற் படும்படியும்,

வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் மேலதிகமான நிகழ்ச்சிகளாக இடம்பெற்ற கூத்துப் போட்டிகளுடன் இம்முறை திருக்குறள் மனனப் போட்டிகளையும், இசைக்கருவிகள் கையாளுதல் தொடர்பான போட்டிகளையும் இணைத்துக் கொள்ளுமாறும் அச்சுற்றுநிருப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தவிரவும், மொழித்திறன் விருத்தி சார்ந்த போட்டிகளில் இம்முறை எல்லா மாணவர்களையும் பங்குபற்றச் செய்து ஊக்குவிப்பதுடன் திறமையான போட்டியார்களை சகல நிலைகளிலும் தெரிவு செய்து அனுப்ப ஒத்துழைக்குமாறு சகல பாடசாலை அதிபர்களையும் கேட்கப்பட்டுள்ளது. (உ-4)

# பல்கலை ஊழியர் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைகழக ஊழியர் சங்கம், நிறைவேற்றப்படாத தமது பல கோரிக்கைகள் தொடர்பில் இன்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

இதன்படி இன்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ள யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம திகதி திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியான .வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதெனத் தீர்மானித்துள்ளது.

மேற்படி தொழிற்சங்க நடவடிக்கையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், நீர், மின் விநியோகப் பணிப்பாளர்கள, பரீட்சை நிலையங்களில் கடமையாற்றுபவர்களுக்கு மறு அறிவித்தல் வரை விலக்களிக்கப்பட்டுள்ளது. (உ-77)

## கண்ணிவெடியால்
# பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிப்பு மையம்

(யாழ்ப்பாணம்)

நிலக்கண்ணி வெடிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் மையம் ஒன்றை சர்வமத சாமதான அமைப்பு மன்னாரில் திறந்து வைக்கவுள்ளது.

முருங்கனில் அமைந்துள்ள ஜீவனோதயம் அமைப்பு அலுவலகத்தில் இந்த மையம் தனியாக இயங்கவுள்ளது.

இதன் செயற்பாடுகளை கண்காணிக்கும் பொறுப்பு வனபிதா ரூபன் அரியநாயகத்திடம் ஒப்படைக்கப் படவுள்ளது.

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற சர்வமத குருமார்களுடனான கலந்துரையாடலில் இந்த மையம் அமைப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

மிதிவெடிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சுயதொழில் முயற்சி அவர்தம் வாழ்வியல் மேம்பாடு ஆகியவற்றில் இம மையம் கவனம் செலுததவுள்ளது.

சர்வதேச, அமைப்புக்களின் உதவிகளை பாதிக்கப்பட்டவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் வகையிலும் இதன் செயற்பாடு அமையவுள்ளது. (உ-4)



தரம் 6 மாணவர்களிடையே வலம்புரி நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவம் அண்மையில் வலம்புரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

# ஈராக் பற்றிய 2வது தீர்மானம் பாதுகாப்புச் சபையில் தாக்கல்

## ஐ.நா சோதனையாளர் அறிக்கைக்காக விவாதம் தாமதம்

(வாஷிங்டன்)

ஈராக் பற்றிய 2வது தீர்மானம் ஒன்று பாதுகாப்பு சபையில் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. போர் தொடுப்பதா? இல்லையா? என்பதை இந்தத் தீர்மானம் முடிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போர் தொடுப்பதை எதிர்க்கும் பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளுக்கு இத்தீர்மான வாசகம் ஏற்கனவே அனுப்பப்பட்டிருந்தாலும் அதன் உள்ளடக்கம் இன்னும் தெளிவாக வெளியிடப்படவில்லை.

ஐ.நா ஆயுதப்பரிசோதகர்களின் அறிக்கையொன்றை எதிர்பார்த்த இத்தீர்மானம் மீதான விவாதம் தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

சமாதான முறையில் ஆயுதக் களைவை மேற்கொள்ள வழங்கப்பட்ட இறுதி வாய்ப்பை ஈராக் பயன்படுத்திக் கொள்ளத்தவறி விட்டதாக இந்த இரண்டாவது தீர்மானத்தில் அமெரிக்காவும், பிரிட்டனும் கூறியிருப்பதாக கருதப்படுகின்றது.

ஐ.நா பாதுகாப்புப் பேரவையிடம் நேற்று முன்தினம் இத்தீர்மானத்தை அவை சமர்ப்பித்துள்ளன.

எனினும் எதிர்வரும் 5ஆம் திகதி அல்லது 7ஆம் திகதி ஐ.நா பிரதம ஆயுதப் பரிசோதகர் ஹன்ஸ் பிளிக்ஸ் பாதுகாப்புப் பேரவையில் அறிக்கை சமர்ப்பிக்கும் வரை இந்தத் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட மாட்டாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

12 பந்திகளைக் கொண்ட புதிய தீர்மானத்தில் ஆயுதக்களைவிற்கு காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லை எனத் தெரிகின்றது.

இந்தப் புதிய தீர்மானம் தொடர்பாக ஜேர்மனிக்கும், பிரான்ஸிற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பிரெஞ் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தத் தீர்மானம் ஈராக் மீதான யுத்தத்தை நியாயப்படுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், ஈராக்கில் பணி புரியும் ஐ.நா ஆயுதப்பரிசோதகர்களிற்கு மேலும் 4மாதகால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (பி-9)

## சீன நில நடுக்கத்தில் இறந்தோர் 300 பேர்

(பெய்ஜிங்)

சீனாவின் ஜியாங்ஜியாங் பிராந்தியத்தில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற பூமியதிர்ச்சியில் 300 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதுடன், ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்திருக்கின்றனர்.

அத்துடன், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டடங்கள் தரை மட்டமாகியிருக்கின்றன. கடந்த 5 தசாப்தங்களில் சீனாவில் ஏற்பட்ட மிகவும் மோசமான பூமியதிர்ச்சி இது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கும் நபர்களை மீட்கும் பணியில் மக்கள் விடுதலை இராணுவ வீரர்களும், மீட்புப பணியாளர்களும் ஈடுபட்டுள்ளனர். (பி-9)



இஸ்லாமபாத்தில் உள்ள சென்.தோமஸ் தேவாலயத்திற்கு பாகிஸ்தான் அரசு சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்க திட்டமிட்டுள்ளதைத் தொடர்ந்து பாகிஸ்தானில் உள்ள தேவாலயங்களின் பாதுகாப்புக்கு அச்சறுத்தல் ஏற்பட்டுள்ளதால் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### அணிசேரா நாடுகள் மகாநாட்டில்

# பாகிஸ்தான் அதிபர் பேச்சுக்கு இந்திய பிரதமர் கண்டனம்

(கோலாலம்பூர்)

அணிசேரா இயக்க மகாநாட்டில் காஷ்மீர் பிரச்சினையை எழுப்பிய பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை இந்திய பிரதமர் வாஜ்பாய் கடுமையாக கண்டித்தார்.

116 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட அணிசேரா இயக்கத்தின் மாநாடு கோலாலம்பூரில் நடைபெற்று வருகிறது. இந்த மகாநாட்டில் நேற்று முன்தினம் பேசிய பாகிஸ்தான் அதிபர் முஷாரப் விதிமுறைகளை மீறி அங்கே காஷ்மீ பிரச்சினையை எழுப்பினார். காஷ்மீர் மக்களுக்காக சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று இந்தமகாநாட்டில் முஷாரப் பேசினார். இந்த பேச்சு பிரதமர் வாஜ்பாய்க்கு வெறுப்பை ஏற்படுத்தியது. இந்தமகாநாட்டில் பேசிய பிரதமர் வாஜ்பாய் முஷாரப்புக்கு தக்க பதிலடி கொடுத்தார். தான் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த உரையை படிக்காமல் `சொந்தமாகவே உரை நிகழ்த்திய பிரதமர் முஷாரப்பை பிரதமர் ஆவேசமாகப் பேசியதாவது;

காஷ்மீர் பிரச்சினையை முஷாரப் இங்கே எழுப்பியுள்ளார். இதன் மூலம் அவர் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளார். இருதரப்பு பிரச்சினைகளை இங்கே எழுப்பக் கூடாது என்பது விதி முறை. அதையும் மீறி அவர் இங்கு பேசியுள்ளார். தீவிரவாதத்தையும், சுதந்திர போராட்டத்தையும் அவர் ஒன்று படுத்திப் பேசுகின்றார். இதன் மூலம் குழப்பத்தை உருவாக்கப் பார்க்கிறார். இந்த விஷயத்தில் இரட்டைவேடம் போடுகிறது பாகிஸ்தான். பயங்கரவாத விஷயத்தில் அணிசேரா நாட்டுடன் ஒரு தெளிவான நிலையை மேற்கொள்ள வேண்டும். தீவிரவாதத்தின் மூல காரணத்தை கண்டு பிடிக்க வேண்டும் என்கிறார் முஷாரப். அப்படியானால் பயங்கரவாதத்தை அவர் நியாயப்படுத்துகிறாரா?

இது வினோதமாக இருக்கிறது. காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. ஆனால் முஷாரப் மூல காரணம் பற்றிப்பேசி தீவிரவாதத்தை நியாயப்படுத்துகின்றார். தன் சொந்தநாட்டில் தீவிரவாதம் நடந்தால் மூல காரணம் பற்றிப் பேசுவாரா? அல்லது நடவடிக்கை எடுப்பாரா? (பி)

# ஆயுதக்களைவு அவசியம் தாக்குதல் வேண்டாம்

## ஈராக் பற்றிய அணிசேரா அமைப்பின் நிலைப்பாடு

(கோலாலம்பூர்)

ஈராக் மீது அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் போர் தொடுக்க எடுத்து வரும் முயற்சிகளுக்கு அணிசேரா நாடுகளின் மகாநாட்டில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அதேசமயம் ஈராக்கிய அதிகாரிகள் ஆயுதக்களைவை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நேற்று முன்தினம் ஆரம்பமான அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் ஈராக் மீது போர் தொடுக்கப்படுவதற்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதுடன், ஆயுதக்களைவை ஈராக் மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டிற்கு தலைமை வகித்துப் பேசிய மலேசியப் பிரதமர் மஹதிர் முகமட் யுத்த நடவடிக்கைகளைக் கண்டித்ததுடன், செல்வந்த நாடுகள் தான்தோன்றித்தனமாக யுத்த முஸ்தீபுகளில் ஈடுபட்டு வருவதாகவும் கூறினார்.

யுத்தம் சட்டத்திற்கு விரோதமானது என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர் மஹதீர் முகமட் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்ட ஒரு நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு முன்வர வேண்டும் என்றும் கூறியுள்ளார். (பி-9)

## வாஜ்பாயுடன் கைகுலுக்க மாட்டாராம்

(கோலாலம்பூர்)

இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் கைகுலுக்க இனியொரு முறை முயற்சிக்கமாட்டேன் என்று கூறியிருக் கின்றார் பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் சார்க் மாநாடு நடந்ததல்லவா? அப்போது இந்தியா-பாகிஸ்தான் இடையே பதற்றம் நிலவிய நேரம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் வலிய வந்து கை குலுக்கினார். அதேபோல் மீண்டும் ஒரு முறை முயற்சிக்க மாட்டேன் என்று இப்போது முஷாரப் கூறியுள்ளார்.

கோலாலம்பூரில் நடக்கும் அணிசேரா மாநாட்டில் வரம்பு மீறிக் காஷ்மீரைப் பற்றிய பேசிய முஷாரப் பின்னர் சீன நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் என்னுடன் கை குலுக்க விரும்பினால் எனக்கு அது பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் நானாக மீண்டும் அதற்கு முயற்சிக்க மாட்டேன்.

இந்தியர்கள் என்னுடன் பேச விரும்பினால் இனி பேசுவேன். நான் பலமுறை முயன்று விட்டேன். நான் மட்டுமே முயன்று கொண்டிருந்தால் போதுமா? அவர்களும் (இந்தியா) முயற்சி செய்ய வேண்டாமா? என்று கேள்வி எழுப்பினார் முஷாரப்.

ஆனால் எல்லை தாண்டிய பயங்கர வாதத்தை பாகிஸ்தான் நிறுத்தினால் மட்டுமே அதனுடன் பேச முடியும் என இந்தியா தெளிவாக அறிவித்து விட்டது. (பி)

## போரைத் தடுக்க ஐரோ நாடுகள் உதவ வேண்டும்

(கெய்ரோ)

ஈராக் விடயத்தில் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போரைத் தடுப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்று அரபு லீக் வலியுறுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் பிரஸல்ஸில் பேச்சுவார்த்தையொன்றை நடத்தச் சென்றுள்ள அரபு லீக்கின் செயலாளர் நாயகம் அமீர்மூஸா இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீதான போரை எவ்வாறு தவிர்க்கலாம் என்பது குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவை கவனம் செலுத்தும் அதேவேளை, தீர்மானங்களை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் அமைச்சர்களுடன் ஆராய இருப்பதாக அவர் தெரிவித்தார். (பி-2)

# ஐவரிக்கோஸ்ட் அமைதி முயற்சிக்கு சோதனை

(அபிட்ஜான்)

ஐவரிக்கோஸ்ட் தீவிரவாதிகளிற்கு முக்கிய அரசாங்க பதவிகளை வழங்கும் வகையில் பிரான்ஸின் உதவியுடன் கைச்சாத்திடப்பட்ட சமாதான ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாது விட்டால் மீண்டும் யுத்தம் வெடிக்கும் என்று தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஐவரிக்கோஸ்டில் புதிய பிரதமர் செய்தோஹரா புதிய அரசாங்கத்தை அமைக்கும் நடவடிக்கைகளில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்.

தீவிரவாதிகளிற்கு இடமளிக்கும் வகையில் தேசிய அரசாங்கம் அமைக்கும் அவரது முயற்சிக்கு ஜனாதிபதி லோரன் பெக்கோவின் ஆதரவாளர்க்ள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் ,சமாதான ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப் படாவிட்டால் மீண்டும் யுத்தம் வெடிக்கும் என்றும், பிரதான தீவிரவாத இயக்கமான ஐவரிக்கோஸ்ரின் தேசாபிமான அமைப்பின் பேச்சாளர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (பி-9)

உலக தரிசனம்



இந்திய-திபெக் கூட்டமைப்பு சங்கத்தின் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள வந்திருந்த திபெக் நாட்டுப் பெண்கள் "திபெத்தைக் காப்பாற்றுங்கள்" என்று கோஷமிட்டனர்.

# ஐக்கிய தேசிய முன்னணி அரசைக்கவிழ்க்க பேய்,பிசாசுகளுடனும் இணையத் தயார்

## முன்னாள் பிரதி சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி ஆட்சியில் மக்கள் வெறுப்படைந்துள்ளனர். இந்த அரசைக் கவிழ்க்க எந்தப பேய் ,பிசாசுகளுடனும் இணையத்தயார் என முன்னாள் பிரதி சுகாதார அமைச்சர் ஜானகபண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தளைத் தொகுதிக்கிளைகளின் புனரமைப்புக் கூட்டத்திலேயே ஜானக பண்டார தென்னக்கோன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சிக்குள் ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. எனினும், ஐக்கிய தேசியக் கட்சியினர் எமது ஜென்ம விரோதிகள் என்பதில் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஒரே கொள்கையில் உள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க,இன்றைய ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதற்காக அவரை வற்புறுத்தி தூண்டிவிடும் பொறுப்பு ஒவ்வொரு கட்சித் தொண்டனுக்கும் உண்டு.

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி பியும் இணைந்தால் ஐக்கிய தேசியக் கட்சி அரசை மண்கவ்வச் செய்வது சுலபம்.

வெறுமனே ஜனாதிபதியையோ, அல்லது கட்சியையோ விமர்சனம் செய்துகொண்டிருப்பதில் பயனில்லை.

எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம திகதி நடைபெறவுள்ள அரச எதிர்ப்பு பேரணியில் மேலும் 5 இலட்சம் ஜே.வி.பி யினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாம் மிகவும்நுணுக்கமாகச் சிந்தித்து செயல்பட வேண்டிய கால கட்டம் இப்போது உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (உ-3)

பழுதடைந்த பிஸ்கற்

# விற்பனை செய்தவருக்கு 5ஆயிரம் ரூபா சரீரப்பிணை

(மண்கும்பான்)

யாழ். நகரப் பகுதியில் உள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றில் காலாவதியான லக்கி பிஸ்கற்றுகள் விற்பனை செய்த வியாபாரி மாநகர சபையின் சுகாதார அதிகாரிகள் மேற்கொண்ட திடீர்சோதனையின் போது வசமாக மாட்டிக்கொண்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நீதிவான் ரி.விக்னராஜா முன்னிலையில சம்பந்தப்பட்ட வியாபாரி ஆஜர் செயயப்பட்டபோது,வியாபாரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி இவ்பிஸ்கட்டுக்கள் கம்பனிக்கு மீளளிப்பதற்காக வியாபார நிலையத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும் அவை விற்பனை செய்யப்படவில்லை எனவும் நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

ஆயினும்,அதனை ஏற்க மறுத்த நீதிவான் வியாபாரியை 5ஆயிரம் ரூபா சரீரப்பிணையில்செல்லஅனுமதித்தார். (உ-55)

# ஆசிய அபி. வங்கி பிரதிநிதிகள் வவுனியாவுக்கு விஜயம்

(வவுனியா)

இலங்கைக்கு நிதி உதவி வழங்கவுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் பிரதிநிதிகள் வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் தலைமையிலான குழுவினருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலின் போது வவுனியாவில் தற்போது மேறகொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிகைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் குடியிருப்புப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கல் தொடர்பாகவும், வவுனியா மாவட்டத்தில் உள்ள 'ஏ' தரவீதிகள், 'பி' தர வீதிகள், ஏ-9 கண்டிவீதி ஆகியவற்றின் புனரமைப்பு தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளதென வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார். (வ)

# சமாதானப்பேச்சுக்கு உந்து சக்தியாக சர்வமதத்தவரும் செயற்பட வேண்டும்

## மதங்களுக்கிடையிலான சர்வமத அமைப்பு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உந்து சக்தியாக நாம் செயற்படல் வேண்டும்.நாட்டில் சமாதானத்தை உருவாக்குதல் என்பது அரசின் கடமை மட்டுமல்ல அனைத்துக் கட்சிகளினதும் மக்கள் அமைப்புக்களினதும் ஏன் ஒவ்வோர் பிரஜையினதும் கடமையாகும்.

அவ்வாறு சிந்தித்துச் செயற்பட்டால் மட்டுமே சமாதானச் செயற்பாட்டை முழுமையடையச் செய்யலாம்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஒரு வருட நிறைவாக நல்லூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வமத சமாதான தியானத்தையொட்டி மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும், அரசும் விடுதலைப்புலிகளும், மக்களும் யுத்தத்தால் வெறுப்படைந்துள்ளனர். பொருளாதார அபிவிருத்திக்கு செலவிடப்பட வேண்டிய பணமே யுத்தத்திற்கு செலவிடப் பட்டுள்ளது.

போரினால் எம்முடைய சகோதர, சகோதரிகளும் அழிந்துள்ளனர்..

இந நிலையிலேனும் நாம் அனைவரும் மனிதர்கள் என்ற சிந்தனையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

முன்னைய பேச்சுவார்த்தைகள் சிதைந்து போனமையை எம்மால் தாங்கிக் கொள்ள முடியாது. தற்போதைய அரசும் விடுதலைப் புலிகளும் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளனர்.இதன் மூலம் இருபக்கக் கருத்துக்களும் பரிமாறப்படுகின்றன.

தெளிந்த சிந்தனையோடு எம்முடைய பிரச்சினைகள் சீர்தூக்கிப் பார்க்கப்படுகின்றன.இவை எல்லாவற்றிலும் குறைகள் காணப்படலாம் கருத்து மோதல்கள் ஏற்படலாம் .ஆனால் அவை திருத்தப்படுவதற்கு மக்களினதும்,சமயத் தலைவர்களினதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

கடந்த ஒரு வருட காலமாக நாம் அனுபவித்ததை நிறைவான ஒன்றிற்கு இட்டுச் செல்ல அரசியல் தீர்வே அவசியமாய் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-4)

## வடமேல் மாகாணத்தில்

# பெருமளவு பாடசாலைகள் மூடப்படும் அபாயம்

(கொழும்பு)

வடமேல் மாகாணத்தில் நிலவும் தமிழ்,முஸ்லிம் ஆசிரியர்களின் பற்றாக்குறை காரணமாக அம்மாகாணத்தில நூறறுககு மேற்பட்ட பாடசாலைகளை மூடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குருநாகல் ,புத்தளம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய இம்மாகாணத்தில் 850க்கும் அதிக மான தமிழ் மற்றும் முஸ்லிம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளதாக வடமேல் மாகாண முதல மைச்சர் அதுல நிமல சிறி ஜெயசிங்க தெரிவித்துளளார்.

பெரும்பாலான ஆசிரியர்கள் தம் இடமாற்றங்களை ஏற்றுக் கொள்ள மறுப்பதனாலும்,போதிய ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படாமையாலுமே ஆசிரியர் பற்றாக்குறை அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# அறவிட முடியா வங்கிக் கடனை அறவிட அமைப்பு

(கொழும்பு)

வங்கிகளிடமிருந்து கடன் பெற்று அதனை மீளத்திருப்பிச் செலுத்தாதவர்களிடமிருந்து அதனை அறவிடுவதற்கு புதிய திட்டம் ஒன்றை அரசாங்கம் அறிமுகம் செய்யவுள்ளது.

இத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கென 'சொத்துடமை முகாமைத்துவ கம்பனி ' என்ற புதிய கம்பனி ஒன்றை அரசு அமைக்கவுள்ளது.

இதற்கான சட்டம் விரைவில் பாராளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்படவுள்ளது.

செலுத்தப்படாதவங்கிக்கடன்களை இக்கம்பனிவங்கிகளிடமிருந்து சந்தை விலைக்கு ஏற்ப கொள்வனவு செய்யும்.

அதன் பின் வங்கிக்கடன் பெற்றவரிடம் இருந்துஅதனை மீளப் பெறுவதே இக் கம்பனியின் செயற்பாடாக அமையவுள்ளது. (உ-3)

## சிரமதானம்

(கோப்பாய்)

யாழ். தேசிய கல்வியியற்கல்லூரியினால் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு மைதானத்துக்கான காணி அண்மையில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

கோப்பாய் மத்தி கிராம அலுவலர் தலைமையில் நடை பெற்ற இந் நிகழ்வில், கோப்பாய் வள்ளியம்மன் சன சமூக நிலையத்தினரும் இராசன் சனசமூக நிலையத்தினரும் இணைந்து கொண்டனர். (உ-79)



ஒரே வாழை மரத்தில் நான்கு குலைகள். தென்னிலங்கையில் குமதுவ பகுதியில் உடுவெல என்ற இடத்தைச் சேர்ந்த டபிள்யு. கருணாதாச என்பவரின் தோட்டத்தில் இந்த அதிசய வாழைமரம் காணப்படுகிறது.

# ஆயிரத்து 600 பேருக்கு இழப்பீட்டுக்கொடுப்பனவு

(கொழும்பு)

வளைகுடா யுத்தத்தால் பாதிக்கப்பட்டமேலும் ஆயிரத்து 600 இலங்கையர்களுக்கு இழப்பீட்டுக்கொடுபனவுகள் வழங்கப்படவுள்ளன.

தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை இவ் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் தலா 3 இலட்சம் ரூபாவழங்கப்படவுள்ளது.

அமைச்சர்மேற்கொண்ட முயற்சியின் பயனாக இவ் இழப்பீட்டுத் தொகை கிடைத்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் சுஸந்த பெர்ணாண்டோ தெரிவித்துளளார் (உ-8)

# கொழும்பில் இருந்து நகுலேஸ்வரத்திற்கு ஆன்மநேய ஒருமைப்பாட்டு இரதபவனி

## நாளை கொம்பனித்தெருவில் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் சமாதானமும் சுபீட்சமும் ஏற்பட்டு அனைத்து இன மக்களும் சகோதரர்களாக வாழ வேண்டும் என்பதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளாக கதிர்காமம்,சிலாபம், புத்தளம், வவுனியா,மன்னார், திருகோணமலை,மலையகம், மட்டக்களப்பு,மூதூர், முல்லைத்தீவு, கிளிநொச்சி முதலாம் மாவட்டங்களுக்கு ஆதிமூல பிரணவரின் இரத பவனியை மேற்கொண்டு ஆங்காங்குள்ள மக்களின் ஆன்மீக சக்தியை ஒன்றுபடுத்தி பிரார்த்தித்து வரும் 'உலக ஆன்மீக எழுச்சிப் பேரணி 'சிவராத்திரியை முன்னிட்டு கீரிமலையில் உள்ள நகுலேஸ்வரத்தற்கு இரத பவனியை மேற்கொள்ள வுள்ளது.

நாளை வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு கொம்பனித் தெருவில் உள்ள உலக ஆன்மீக எழுச்சிப்பேரணி அலுவலகத்தில் இருந்து புறப்படும் இவ் இரத பவனி சிலாபம்,உடப்பு,வவுனியா வழியாக கிளிநொச்சியை அடையும்.

அங்கு ஜெயந்திநகர் 'மகாதேவ ஆசிரமம்' 'குருகுலம்' ஆகிய குழந்தை இல்லங்களில் தரித்து அக்குழந்தைகளுக்கு வஸ்த்திர தானம் வழங்கியும். 'பிரணவ பஞ்சாட்சர மந்திர உச்சாடணம்' 'பாவநாச கற்பூர யாகம்' முதலியவற்றை நடத்தி அவர்கள் நல்வாழ்விற்குப் பிரார்த்தித்த பின் மறு நாள் காலை புறப்பட்டு நகுலேஸ்வரத்தை அடையும்.

முதலாம் திகதி காலை 6 மணி முதல் 2ந் திகதி காலை 6 மணி வரை சிவராத்திரி விரதம் முறைப்படி நோற்கப்பட்டு 24 மணி நேரமும் தொடர் 'பிரணவ பஞ்சாட்சர மந்திர உச்சாடணமும்' 'பாவநாச கற்பூர யாகமும்' நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து யாழ். மக்களையும் கலந்துகொணடு புனிதப் பிரதேசங்களின் புனிதம் காப்பாறறப்படவும், நமது வழிபாட்டுச் சுதந்திரம் பாதுகாக்கப்படவும் பிரார்த்துக்குமாறு அழைக்கப்பட் டுள்ளது.

அதையடுத்து இரத பவனி, மாவட்டபுரம்,தெல்லிப்பளை, தொண்டமானாறு, நல்லூர்,காரைகநகர், நயினாதீவு,கொழும்புத்துறை முதலாமிடங்களிலும் 'பஞ்சாட்சர மந்திர உச்சாடணம்' 'பாவநாச கற்பூரயாகம்' என்பவற்றை நடத்தி பின் ,3ஆம் திகதி கொழும்பிற்கு திரும்பும். இந்த இரத பவனியை உலக ஆன்மீக எழுச்சிப் பேரணி முனைவர் அடியார்க்கடியன் தவத்திரு சிவகுருநாதன் அடிகள் வழிநடத்தவுள்ளார்.(உ-8)

# ஏப்ரல் 3ஆம் வாரத்தில் ஏ.எல். பரீட்சை ஆரம்பம்

(கொழும்பு)

இவ்வாண்டுக்கான க.பொ.த(உ/த) பரீட்சை ஏப்ரல் 3ஆம் வாரம் ஆரம்பமாகவுள்ளது.

இப்பரீட்சை தொடர்பான நேர அட்டவணை தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.ஏ.என். விஜயசிறி அறிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் வெளியிடப்படவுள்ளன.

பாடசாலை மட்டத்திலான மதிப்பீடுகளின் பெறுபேறுகள் தாமதமாகியதால்தான், இப்பரீட்சையின் பெறுபேறுகள் தாமதமாகின எனவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (உ-8)

# இன்னு ஒரு தகவல்

## சீதையின் சிரிப்பு!

அசோக வனத்தில் ஒரு மரத்தின் மேல் அனுமார் உட்கார்ந் திருக்கிறார். சீதையைப் பார்ப்பதற்காக இராவணன் வருகிறான். என்னென்னவோ சொல்லிப் பார்க்கிறான். நதியின் பிரவாகம் இருக்கிறதே அது போனது போனதுதான்! இளமையும் அப்படித்தான். போனால் திரும்பி வராது! உன்னுடைய யௌவனத்தை ஏன் இப்படி வீணாக்கிக் கொண்டிருக்கிறாய்? என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு சந்தோஷமாக இருக்க வேண்டியது தானே! என்கிறான்.

இந்தத் தகாத வார்த்தைகளைக் கேட்டதும் யாருக்குமே கோபம் வருவது இயல்பு. ஆனால் சீதை ஒரு துரும்பை அவுன் முன் போட்டுப் புன் சிரிப்போடு அவனுக்குப் பதில் சொல்வதாக வால்மீகி எழுதியிருக்கிறார். இந்த இடத்திலே நமக்கு ஒரு சந்தேகம். இந்தச் சமயத்திலே சீதையின் முகத்தில் புன்சிரிப்பு வருவதற்கு என்ன காரணம்?

இந்தச் சந்தேகத்தைப் பக்திப் பிரசங்கம் பண்ணுகின்ற ஒருவர் தீர்த்து வைக்கிறார். எப்படி தெரியுமா? சீதா கல்யாணம் நடந்த சமயத்தில் பரமசிவனுக்கு அழைப்பு அனுப்பவில்லையாம். ஏன் தெரியுமா? முகவரி கிடைக்கவில்லை! அவர் தான் எங்கேயும் இருக்கிறவராயிற்றே! எந்த விலாசத்திற்கென்று பத்திரிகையை அனுப்புவது? அதனால் என்ன செய்வதென்று தெரியாமல் இருந்து விட்டார்களாம். ஆனால் பரமசிவன் சும்மா இருக்கவில்லை. பத்திரிகை வரவில்லையென்றால் கூட, சீதைக்குக் கல்யாணம் என்று கேள்விப்பட்டார். வந்து சேர்ந்து விட்டார்.

ஆனால் பாருங்கள். அவர் வந்து சேர்வதற்குள் கல்யாணம் முடிந்து விட்டது. மணமக்கள் எல்லார் கால்களிலும் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரம் பார்த்துப் பரமசிவன் வந்து சேர்ந்தார். உடனே இராமரும் சீதையும் அவரின் காலில் விழுந்து வணங்கினார்கள். சீதை பரமசிவனைப் பார்த்து நீங்கள் எங்களுக்கு ஒரு பரிசும் கொடுக்க வேண்டாம். தங்களுடைய ஆசி மட்டும் எங்களுக்கு இருந்தால் போதும் என்றார்களாம்.

ஏன் பரிசு வேண்டாம் என்று சொல்கிறாய்? என் கையில் ஒரு பொருளும் இல்லையே என்பதைப் பார்த்து விட்டு அப்படிச் சொல்கிறாயா? என்று கேட்டிருக்கிறார் பரமசிவன். அப்படித்தான் வைத்துக் கொள்ளுங் களேன்! உங்களுக்கு வீண் சிரமம் வேண்டாமே என்பதற்காக அப்படிச் சொன்னேன் என்றார் சீதை. அப்படியெல்லாம் நினைத்து விடாதே. என்னிடம் மிக உயர்ந்த பொருள் ஒன்று இருக்கிறது. அதை உனக்குப் பரிசாகக் கொடுக்கப் போகிறேன் என்றார் அவர். அது என்ன என்று கேட்டார் சீதை. என்னுடைய புன்சிரிப்பு என்றார். அது எப்படி விலையுயர்ந்த பொருளாகும்? என்று கேட்டார். ஏன் ஆகாது? என் சிரிப்பைக் கண்டுதான் திரிபுரம் எரிந்தது தெரியுமா? அதை உனக்குப் பரிசாகக் கொடுக்கிறேன் என்றார். இப்படி அப்போது வாங்கிய அந்தப் பரிசுதான் இன்றைக்கு அசோகவனத்தில் சீதையிடம் இருந்தது. இராவணனுக்கு முன்னால் ஒரு துரும்பைப் போட்டு விட்டுச் சீதை புன்முறுவலோடு பதில் சொன்னதாக எழுதியிருப்பதற்குக் காரணம் இது தான்.

அந்தச் சிரிப்பு திரிபுரத்தை எரித்தது. இந்தச் சிரிப்பு இலங்கையை எரிக்கப் போகிறதென்பதைக் காட்டுவதற்குத் தான் சீதை முகத்திலே தெரிந்தது என்று விளக்கம் கொடுக்கிறார் நமது பெரியவர். ஆகவே சிரிப்பிலே கூட எவ்வளவு அர்த்தம் இருக்கிறது பாருங்கள்.

நமது ஆள் ஒருவர் ஒரு நாள் மிகவும் சாவகாசமாக முகத்திலே புன்முறுவலோடு வந்து கொண்டிருந்தார். என்னசார் விஷயம்... உங்கள் முகத்திலே தெரிகின்ற அந்தப் புன்முறுவலுக்கு என்ன காரணம் என்று அவரிடமே கேட்டேன். வைக்கோல் போர் தீப்பிடித்து எரிகிறது சார்! அதுதான் இப்படி வந்து கொண்டிருக்கிறேன் என்றார். என்ன சார் இது அதை இவ்வளவு சாதாரணமாக எடுத்துக் கொள்கிறீகள்? உடம்பு பதற வேண்டாமா? என்றேன். எதற்குப் பதறவேண்டும். எரிகின்ற வைக்கோல் போர் என்னுடையதல்ல. எதிர்வீட்டுக்காரருடையது என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு

# முன்னாள் பணிப்பாளர் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிஹால் கருணாரட்னாவை 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல கண்டி மேல் நீதிமன்ற நீதிவான் சிசில்டி ஒப்பு அனுமதிவழங்கியுள்ளார்.

2001ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி பொதுத் தேர்தல் காலத்தில் ஹிங்குராங்கெற்ற பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எம். குணரட்னாவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கு விசாரணை நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிவான் இப்பிணை அனுமதியை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் முன்னாள் பணிப்பாளர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பிணை வழங்குமாறு நீதிவானிடம் மனு செய்ததை அடுத்தே பிணை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு சம்பந்தமான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் ஜுன் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (உ-8)

# போஷாக்கின்மையால் 17 குழந்தைகள் பலி

(பூநகரி)

கடந்த காலங்களில் வன்னிப்பகுதி மீது அரசாங்கம் விதித்திருந்த பொருளாதார, உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் மீதான இறுக்கமான தடை நடவடிக்கையால் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப் பட்டுள்ளதுடன் நூற்றுக்கணக்கான குழந்தைகள் இறந்துள்ளனர்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட சுகாதார அதிகாரி அலுவலகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களே போசாக்கின்மையால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

இதேவேளை, பூநகரிப் பிரதேசத்தில் சிறுவர்களின் போசாக்கு நிலை குறித்து நடத்தப்பட்ட ஆய்வில் கடந்த ஆண்டு மட்டும் ஆயிரத்து 371 சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், 17 குழந்தைகள் போசாக்கு இன்மையால் உயிரிழந்துள்ளார்கள் என்றும் அப்புள்ளி விபரம் மூலம் தெரிய வந்துள்ளது. (உ-10)

# வில்பத்து சரணாலயம் செல்ல உல்லாசப் பிரயாணிகளுக்கு அனுமதி

(அனுராதபுரம்)

18 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த வில்பத்து தேசிய சரணாலயம் எதிர்வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதி முதல் மீண்டும் திறந்து வைக்கப் படவுள்ளதாக அனுராதபுர வனபரி பாலன திணைக்களக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் எதிர்வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதி முதல் வில்பத்து தேசிய சரணாலயத்திற்குச் செல்ல அனுமதிக்கப் படுவர் என திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

1985ஆம் ஆண்டு தமிழீழ விடு தலைப்புலிகள் அனுராதபுரத்தில் தாக்குதல் மேற்கொண்டு விட்டு மேற்படி சரணாலயத்தின் ஊடாகத் தப்பித்து சென்றனர் என்று கருதப் பட்டது.

இதனையடுத்து, இப்பிரதேசத்தை தடைசெய்யப்பட்ட இடமாக அரசு பிரகடனப்படுத்தியிருந்ததுடன், அதற்குச் செல்ல எவருக்கும் அனுமதி வழங்கப் படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

# முஸ்லிம் மக்கள் ஓரங்கட்டப்படுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது

அமைச்சர் ஹக்கீம் கர்ச்சனை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்து முஸ்லிம் மக்களை ஓரம்கட்டுவதனை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. இது ஒட்டு மொத்த முஸ்லிம் மக்களின் நிலைப் பாடாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

''சமாதான முயற்சிகளில் வட கிழக்கு ஊடகவியலாளர்களின் பொறுப்பு" என்ற தலைப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் காத்தான்குடி கிஸ்புல்லா கலாசார நிலையத்தில் நடைபெற்ற செயலமர்வில் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

கடந்த காலங்களில் ஆட்சி செய்த அரசுகளும், தமிழீழ விடுதலைப் புலிகளும் முஸ்லிம் மக்களுக்கு துரோகங்களையும், துன்புறுத்தல் களையும் இழைத்தனர்.

ஆனால் அன்றைய சூழ்நிலையில் அது பற்றித் தட்டிக் கேட்கும் அவசியம் ஏற்படவில்லை.

ஆனால் இப்பொழுது முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்காக, போராடுவதற்கென ஒரு தனித்துவமான அரசியல் இயக்கம் இருப்பதால், சொந்தக் கால்களில் நின்று போராடலாம் என்ற நம்பிக்கை உண்டு எனவும்,

வடகிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்கள் அவர்கள் வாழுகின்ற பிரதேசங்களைப் பொறுத்து தனித்தனியாக வெவ்வேறு கோணங்களில் நோக்கப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டாலும், முஸ்லிம் மக்களின் நலன்கள் குறித்த விடயங்களில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று பட்டுச் செயற்படுவோம் எனவும் அமைச்சர் அங்குசுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)



# இராசி பலன்

26. 02. 2003
(மாசி 14, புதன்)

| | |
|---|---|
| தசமி | மு.ப 9.53 வரை |
| மூலம் | மு.ப 9.59வரை |
| இராகுகாலம் | 12.29-1.59 |
| சுபநேரம் | 4.59 - 6.29 |

**மேடம்**
தொழிலில்புதியசிந்தை, பெரியோர் ஆதரவு, போசன சுகம், திடீர்நன்மை.

**இடபம்**
மனக்கிலேசம், தர்மம், நிலைமாற்றம், உடல்வியாதி.

**மிதுனம்**
நல்லமுயற்சிசென்ற இடத்தில் செல்வாக்கு, உறவினர் வருகை, தனலாபம்.

**கடகம்**
ஆதாயம்,ஆரோக்கியம், சத்துரு ஜெயம், இலட்சுமிகரம்.

**சிங்கம்**
தொழில்நன்மை,அமைதிக்குறைவு, முயற்சிதாமதம், குடும்பக்கவலை.

**கன்னி**
மனச்சஞ்சலம், இனசனத்தொடர்பு, காரியதாமதம்,வியாதி.

**துலாம்**
குடும்பசுகம்,கூட்டுமுயற்சி,காரியஅநுகூலம், தனலாபம்.

**விருச்சிகம்**
களஸ்திரநன்மை, கோபப்படுதல், முயற்சி தாமதம்,தனவிரயம்.

**தனுசு**
தேகசுகம், போட்டி மனப்பான்மை, விருந்துபசாரம், நல்லமுயற்சி.

**மகரம்**
சயனசுகக்குறைவு, ஆக்கம், துயரம், முயற்சிதாமதம்.

**கும்பம்**
தடைப்பட்ட காரியம் நிறைவேறும், போசன சுகம், தனவரவு, குடும்ப நன்மை.

**மீனம்**
மரியாதைக்குறைவு, மேன்மை, செய்தொழில் முன்னேற்றம், பிறர் உதவி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# மனித எலும்புக்கூடு எச்சங்களை சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு அனுப்ப உத்தரவு

(திருகோணமலை)

திருகோணமலை பெரியகடை உல்லாசக் கடற்கரையில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் எச்சங்களைக் கொழும்பு சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு அனுப்பி வைக்குமாறு திருகோணமலை நீதிவான் எஸ் .தியாகேந்திரன் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த புதன் மற்றும் வியாழக் கிழமைகளில் தோண்டி எடுக்கப்பட்ட இவ் எலும்புக்கூடுகள் ஆண்களுடையதா? பெண்களுடையதா? எலும்புக்கூட்டுக்குரியவர்களின் அண்ணளவான வயது என்ன? மரணம் எவ்விதத்தில் சம்பவிக்கப்பட்டது? அவை எப்போது புதைக்கப்பட்டன போன்ற உள்ளிட்ட 8 விடயங்களை கண்டறியுமாறும் நீதிவான் பணிப்புரை விடுத்துள்ளார்.

இப்புதைகுழிகளைத் தோண்டிய திருகோணமலை நகராட்சி ஊழியர்களும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தனர். (உ-8)

# பாதுகாப்பு வலயத்தினுள் நுழைந்த சிறுவனின் பெற்றோர்க்கு நீதிமன்ற அழைப்பாணை

(வவுனியா)

வவுனியா இலுப்பைக்குளம் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சிறுவன் நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, சிறுவனின் பெற்றோரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

முள்ளிக்குளம் என்ற இடத்தைச் சேர்ந்த பா.மோகனகாந்தன்(வயது15) என்ற சிறுவனே ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மேற்படி குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டான்.

இது தொடர்பான விசாரணையினை மேற்கொண்ட நீதிவான் மேற்படி சிறுவனை பெற்றோரிடம் ஒப்படைப்பதன் பொருட்டு இரண்டு தினங்கள் சந்தர்ப்பம் அளித்து நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கும் படியும் முள்ளிக்குளம் பிரதேசத்தின் கிராம சேவையாளரூடாக இச்சிறுவனின் பெற்றோரை நீதிமன்றில் ஆஜராகுமாறும் கட்டளை அனுப்புமாறும் பொலிஸாரிற்கு உத்தரவிட்டுள்ளார். (உ-10)

# பத்திரிகைத்துறை பயிற்சிப்பட்டறை

(கொழும்புத்துறை)

சமூகத்தொடர்பு ஆணைக்குழுவும் பாதுகாவலன் பத்திரிகை நிறுவனமும் இணைந்து நடாத்தும் ''ஊடகவியலுக்கோர் அறிமுகம்'' எனும் தலைப்பிலான பத்திரிகையாளர்களிற்கான பயிற்சிப் பட்டறை யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வருடம் தோறும் நடைபெற்று வரும் மேற்படி பயிற்சிப் பட்டறை ஊடகவியலில் கால் பதித்தவர்களிற்கும், கால் பதிக்க விரும்புபவர்களிற்கும் பயனுள்ளதாக அமையும் என்று சமூகத் தொடர்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (த-51)

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று
-குறள்-

# வலம்புரி

## யாழ்ப்பாணச் சுற்றுலா !

தென் இலங்கையில் இருந்து பல தரப்பினரும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தவண்ணமுள்ளனர். அரசியல்வாதிகள், மதகுருமார்கள, பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் இதில் அடங்குவர். அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாததாகிய பின்னர், அமைச்சர்களின் யாழ்.வருகை சர்வசாதாரணமானதொரு நிகழ்வாகவுள்ளது.

அமைச்சர்களும் மதகுருமார்களும் யாழ்ப்பாணம் வருவதில் எந்தத் தப்புமில்லை. ஆனால் அவர்களின் வருகையால் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு என்ன நன்மை உண்டு எனக்கேள்வி எழுப்புவது நியாயமானதே.

ஏனெனில்,யாழ்.குடாநாட்டு மக்கள் யுத்தத்தின் பிடிக்குள் சிக்குண்டு நலிந்து போனவர்கள். ஈனர்களின் இனவெறித்தாக்குதலுக்கு தங்கள் உறவுகளைப் பலி கொடுத்தவர்கள்.சொந்த மண்ணை,மனையை விட்டு வெளியேறி இந்த உலகத்தையே வெறுத்து வாழ்பவர்கள். உறவுகளைக் காணாமல் தேடித்தேடி ஓடாய் தேய்ந்து போனவர்கள்.அத்தகைய மக்கள் வாழ்கின்ற யாழ்ப்பாணத்திற்கு அமைச்சர்களும மதகுருமார்களும் விஜயம் செய்யும் போது அந்த விஜயத்தில் நலிந்து போன மக்களுக்கு ஏதாவதொரு நன்மை இருக்கவேண்டும்.

ஆனால்,அத்தகைய நன்மை ஏதேனுமிருப்பதாக தெரியவில்லை. மாறாக யாழ்ப்பாணமும், யாழ்ப்பாணத்து மக்களும் தென்னிலங்கையில இருந்து வருவோர்க்கு ஓர் காட்சிப பொருளாகவே தெரிகிறது. யாழ்ப்பாணம் இன்று"விசிற்"செய்யக்கூடிய ஓர் இடமாகவும், சொந்த மண்ணில்அகதிகளாகப்பட்டு குடிசைகளில் வாழ்கின்ற தமிழ் மக்கள் வேடிக்கைக் குரியவர்களாகவும தென்னிலங்கை உல்லாசப் பயணிகளுக்கு தெரிவது, வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவது போலாகும்.

யாழ்.குடாநாட்டு மக்கள் தனித்துவமான பண்பாட்டு விழுமியங்களோடு வாழ்ந்தவர்கள-வாழ்பவர்கள். தென்னிலங்கை கலாசாரத்தை அவர்கள் இல்வாழ்க்கைக்குரிய கலாசாரமாக கருதாதவர்கள்.எனவே யாழ்ப்பாணத்திற்கு உல்லாசப் பயணத்தை மேற்கொண்டு வருகின்ற தென்னிலங்கை மக்கள்யாழ்ப்பாணக் கலாசாரத்தை மதிக்க வேண்டும்.

எப்படியும்,எவ்வாறும் நடக்கலாம் என்ற உணர்வுக்கு அவர்கள் சற்று எல்லையிட வேண்டும். இல்லையேல் அதன் விளைவுகள் பாரதூரமானதாக இருப்பது தவிர்க்க முடியாததாகி விடும்.

இதே போன்று யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற பௌத்த பிக்குகள்,கிறிஸ்தவ மதகுருமார்களுக்கு ஓர் பாரிய பொறுப்பு உண்டு அதாவது யுத்தத்தால் நலிந்து போன யாழ்ப்பாணத்து மக்களின் நிலைமையை வெளியில் எடுத்துக் கூறுவதே அந்தப் பொறுப்பாக இருக்கும்.

# போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பின்பற்றுக! அரசு-விடுதலைப் புலிகளுக்கு ஆலோசனை

## ஜப்பான்-அமெரிக்கா கூட்டாக வழங்கின

(கொழும்பு)



தொடர்ந்தும் இடம்பெற்று வரும் போர் நிறுத்த மீறல்கள் குறித்து அமெரிக்கா, யப்பான் மற்றும் உதவி வழங்கும் நாடுகள் பலவும் கவலை தெரிவித்துள்ளன. யூன் மாதம் ரோக்கியோவில் நடைபெறவுள்ள மகாநாட்டிற்கு முன்னர் போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பின்பற்றி இரு தரப்பும் நடக்க முயல வேண்டும் என்றும் அவை ஆலோசனை தெரிவித்துள்ளன.

படையினரும், புலிகளும் விடாப்பிடியாக ஒப்பந்தத்தை மீறும் செயல்களில் ஈடுபட்டு வருவது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை அரசியல் ரீதியில் அசௌகரியங்களுக்குள் தள்ளிவிடுவதாக இருக்கின்றது என்று அமெரிக்க ராஜாங்க செயலர் றிச்சார்ட் ஆர்மிரேஜ்ஜும், ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷியும் ஒருமித்து கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஒப்பந்த மீறல்களால் தென்னிலங்கையின் சமாதானம் தொர்பான பொதுக் கருத்துக்கள் மோசமான முறையில் பாதிக்கப்படுகின்றன.

புலிகளின் உண்மையான நிலைபபாட்டைப் பற்றி சிங்கள மக்கள் சந்தேகம் கொள்ளத் தொடங்கியுள்ளனர் என்றும் மேற்படி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையிலிருந்து திரும்பிய போது அகாஷி புதுடில்லியிலும் உரையாடியுள்ளார். இந்நிலையில் சமாதானப் பேச்சுக்களின் போது புலிகளின் தூதுக்குழுவுடனும், அரசாங்கக் குழுவுடனும் தனித்தனியான முறையில் வெளிநாடுகள் சிலவற்றின் பிரதிநிதிகள் உரையாடவுள்ளதாகவும் தகவலறிந்த வட்டாரங்க்கள் தெரிவிக்கின்றன. (உ)



# நீடித்த சமாதானத்தில் நாட்டு மக்களுக்குள்ள நம்பிக்கைக்கு நெதர்லாந்து தூதர் பாராட்டு

(கொழும்பு)

இருபது வருடகால யுத்தத்திற்கு தீர்வு காண வேண்டும் என்பதில் இலங்கை மக்கள் அனைவரும் திடமாக உள்ளனர் என இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் சுஷான் பிளேம் ஹாட் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளுக்கு உதவும் வகையில் கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற்ற இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டில் 10 மில்லியன் யூரோ கடனை விலக்கழிப்பதாக நெதர்லாந்து அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இக்கடன் விலக்கழிக்கப்படுவதற்கான ஆவணங்களை விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் நேற்று முன்தினம் கையளித்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்துத் தூதுவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில், கடந்த ஒரு வருட காலத்தில் சமாதான நடைமுறைகளில் முன்னேற்றங்களையும் அதேவேளை, சில பின்னடைவுகளையும் காண முடிந்தது.

எனினும், இரு நாடுகளின் முயற்சியின் பயனாக சமாதானம் தக்க வைத்துக்கொள்ளப்படுகின்றது.

பொஸ்னியா, ஆபிரிக்கா, ஆப்கானிஸ்தான் உட்பட உலகின் பல பகுதிகளிலும் சமாதான முயற்சிகளில் நெதர்லாந்து ஈடுபட்டு வருகின்றது.

அந்நாடுகளின் சமாதான விடயங்களிலும் ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. சில சந்தர்ப்பங்களில் மோதல்கள் இடம்பெற்றதையும் காண முடிந்தது என்று தெரிவித்த நெதர்லாந்து தூதுவர்,

இலங்கையில் நிரந்தர சமாதானம் நீடிக்க வேண்டும் என்பதில் நாட்டு மக்கள் அனைவரும் நம்பிக்கையுடன் இருப்பதையும் சுட்டிக்காட்டிப் பேசியுள்ளார். (உ-8)

# எயிட்ஸ் விழிப்புணர்வுத் திட்டம் 3 மாதங்களில் 9405 பேர் பயன்

(ஈச்சமோட்டை)

ரி.ஆர்.ஆர்.ஓ நிறுவனமும் யுனிசெவ் நிறுவனமும் இணைந்து நடாத்தும் எயிட்ஸ் தடுப்பு விழிப்புணர்வுத் திட்டத்தில் இதுவரை 9 ஆயிரத்து 405 பேர் பயனடைந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில், சாவகச்சேரி, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, ஊர்காவற்றுறை, வேலணை, பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் கடந்த ஆண்டு நவம்பர் முதலாம் திகதி முதல் இவ்வாண்டு ஜனவரி முப்பதியோராம் திகதி வரை யான 3 மாதங்களிலேயே இவ்வளவு தொகையினர் பயன் பெற்றிருக்கின்றனர்.

இதில் 3 ஆயிரத்து 687 ஆண்களும் 5 ஆயிரத்து 718 பெண்களும் அடங்குகின்றனர்.

இவ்விழிப்புணர்வுத் திட்டம் உதவி அரச அதிபர் பணிமனைகள், பிரதேச செயலர் பணிமனைகள், தொழிநுட்ப நிறுவனங்கள், பெண்கள் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கிளினிக்குகள், நலன்புரி நிலையங்கள், முகாம்கள், பிரதேச சபைகள், பொலிஸ் நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், பொது மக்கள் கூடும் இடங்கள் ஆகியவற்றில் நடைமுறைப் படுத்தப்பட்டது.

கடந்த மூன்று மாத காலத்தில் 202 நிகழ்வுகளூடாக இத்திட்டத்தை 18 திட்ட உத்தியோகத்தர் மேற்கொண்டு வந்துள்ளனர்.

இதுவரை இத்திட்டத்தினால் பயனடைந்தவர்கள் யாழ்ப்பாண சனத் தொகையில் 1.6 வீதமானவர்களே எனவும் இத்திட்டம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுமெனவும் இந்நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-59)

# மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு கலைவாணி விளையாட்டு மைதானத்தில் அதிபர் எஸ். நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் பிரதமவிருந்தினராகவும,தமிழீழ கல்விக் கழகப்பொறுப்பாளர் வை.கவியன்பன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்.(இ)

# இடதுசாரிக் கட்சிகளுக்கு இழுக்கு ஏற்படும் விதத்தில் செயற்படுகிறது ஜே.வி.பி

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி, பாலர் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களைப் போலவே பாராளுமன்றத்தில் நடந்து கொள்கிறது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா ஜனாதிபதியாக இருக்கும் வரை கௌரவமான அரசியலை நடத்துவது கஷ்டமான செயல்.

மீண்டும் நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரேயொரு தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே ஆவார்.

கிராமிய பொருளாதார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பந்துல குணவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குருநாகல் பௌத்த லோக மாவதையில் அரச முதலீட்டு வங்கி யின் கிளை ஒன்றினை திறந்து வைத்த பின் மல்கடுவா தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கலை அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

மக்கள் விடுதலை முன்னணி இடது சாரிக் கட்சிகளுக்கு இழுக்கை ஏற்படுத்தும் விதத்தில் தற்போது செயற்படுகின்றது.

1988, 1989 ஆம் ஆண்டு காலப பகுதிகளில் தம்மால் கொலை செயயப்பட்டவர்களின் சடலங்களை முழங்காலுக்கு மேலே தூக்கிச் செல்லக கூடாது எனக் கூறியவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினரே.

உலகின் மிலேச்சத்தனமான பயங்கரவாதிகளாகத் திகழ்ந்தவர்களும் இவர்களே.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் முகமாக பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

இவ்விரு கட்சிகளினதும் இத்தகைய செயற்பாடுகள் நாட்டு மக்கள் மத்தியில் பலிக்காது. ஏனெனில், இன்றைய சூழ்நிலையில் அனைத்து இன மக்களும் சமாதானத்தை விரும்புபவர்களாகவே காணப்படுகின்றனர் என்று தெரிவித்துள்ளார். (உ-8)

## தினசரி தியானம்

ௐ

### நீங்களே உங்களுக்குத் தலைவன்

உங்களுடைய விதிக்கும், அதிர்ஷ்டத்துக்கும் நீங்களே காரணகர்த்தா. உங்கள் விதிக்கு நீங்களே தலைவன். நீங்கள் ஒரு செயலைச் செய்யவும், செய்யாமல் இருக்கவும் முடியும். சரியான சிந்தனையால், சரியான உணர்வால், செயலால் இறைவனை அடைய முடியும். உங்களது மனத்திண்மையால் பழைமையான பழக்க வழக்கங்களை உடைத்தெறியலாம். புதிய பழக்கங்களை வளர்த்துக்கொள்ள முடியும். உங்களது ஆன்ம சக்தியால் உலகையே அசைக்க முடியும். உங்களது எல்லா முயற்சிகளிலும் மன நிறைவளிக்கும் வெற்றி பெற முடியும்.

சுவாமி சிவானந்தர்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் அதாவுல்ல உட்பட ஐவருக்கு உயர் பதவி வகிக்கத் தடை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு முடியும் வரை, கட்சியில் இருந்து ஏற்கனவே பிரிந்து சென்ற ஏ.எல்.எம்.அதாவுல்ல உட்பட ஐவருக்கு கட்சியில் அதி உயர் பதவிகளை வகிப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கட்சித் தலைவர் எஸ்.சுபைர்தீன் தவிசாளர் ஏ.எல்.எம்.அதாவுல்ல, மூத்த துணைத் தலைவர் உதுமா லெப்பை, பொதுச் செயலாளர் ஏ.எல்.எம்.ஹப்ரத் மற்றும் தேசிய அமைப்பாளர் ஆகியோருக்கு எதிராகவே இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கட்சியின் தவிசாளரும் பிரதி அமைச்சருமான அதாவுல்ல,செயலாளர் ஹப்ரத் ஆகியோர் தவிரஏனையோர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் மீண்டும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## சிப்பாய் தற்கொலை

(வவுனியா)

ஓமந்தை கொத்தாக்காரன் குளம் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று அதிகாலை 3மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஆராச்சிகே விஜயரத்தின (வயது 24) என்பவரே மரணமானவராவார்.

இச்சம்பவத்தினை அடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா பதில் நீதிவான் எம்.சிற்றம்பலம் விசாரணைகளை மேற் கொண்ட பின் மருத்துவப் பரிசோதனைக்காக சடலம் வவுனியா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.(த-5)

## இலங்கை வழங்க வேண்டிய கடனை நெதர்லாந்து ரத்துச் செய்தது

### மேலும் உதவி வழங்கவும் உறுதி

(கொழும்பு)

இலங்கை நெதர்லாந்துக்கு செலுத்தவேண்டிய ஆயிரம் மில்லியன் ரூபா கடனை மீளச் செலுத்த தேவையில்லையென்று நெதர்லாந்து அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை நெதர்லாந்து தூதுவர், பொருளாதார மறு சீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட்விடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கைக்கு பொதுவான உதவிகளையும் நெதர்லாந்து வழங்கும் என்று உறுதி அளித்துள்ளார்.

இநதத் தொகை 2002/2003ம் ஆண்டிற்கான இருதரப்பு கடன் தவணைப் பணத்திற்கு நிகரான தொகையாகும்.2003ம் ஆண்டிற்கான தவணைப் பணத்தை இலஙகை நெதர்லாந்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை என்பதுடன், ஏற்கனவே செலுத்தப்பட்ட இதன் ஒரு பகுதியையும், நெதர்லாந்து மீண்டும் இலங்கையிடம் திருப்பி ஒப்படைக்கவுள்ளது. இதனால் இப் பணம் இவ்வாண்டின் வரவு செலவுத்திட்ட செலவினத்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

மேலும் கண்ணிவெடிகளை அகற்றும''ஹலோ" நிறுவனத்தின் திட்டததிற்கு 45 மில்லியன் ரூபாவை நெதர்லாந்து வழங்கியிருந்தது. இப்பணத்தின் மூலம் யாழ்ப்பாண குடா நாட்டின் பாடசாலைகள், விவசாய நிலங்கள்,குடியிருப்புகள் ஆகியவற்றில் இருந்து கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.இதற்கென 40 இலங்கையர்களுக்கு ஹலோ நிறுவனம் பயிற்சி வழங்கிவருகின்றது. (இ)

## மனித உரிமை ஆணைக் குழுவுக்கு யாழ்ப்பாணத்தில் கட்டடம்

(கொழும்பு)

மனித உரிமைகள் ஆணைக் குழுவின அலுவலகம் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக செயல்படுவதற்கான கட்டடம் ஒன்று சுமார் 6 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை மனித உரிமைகளை மேம்படுத்தவும் வலுப்படுத்துவதற்குமான செயற்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள குடிசார் சமூக நிறுவனங்களின் பூரண விபரங்களை திரட்டும் பணியில் கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் ஈடுபட்டுள்ளது.

இந்த விபரம் திரட்டலின் ஒரு கட்டமாக பல் வேறு விபரங்கள் அடங்கிய கேள்விக் கொத்துக்களை சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தேசிய இணைப்பாளர் எம்.சி.எம்.இக்பால் அனுப்பி வைத்துள்ளார். (வ)

---

**ஸ்ரீ.சு.கட்சி...**

எதிரான பலம் வாய்ந்த ஒரு அமைப்பை உருவாக்கி அதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் இரு சாராரும் கைச்சாத்திடுவதென்றும் தீர்மானித்துள்ளதாக இருகட்சியையும் சேர்ந்த கலாநிதி சரத் அமுனுகவும் ,விமல் வீரவன சவும் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாட்டில் இல்லாத போதும் அவரது ஆசியுடன் இத் தீர்மானத்துக்கு வந்துள்ளதாகவும், அவர் நாடு திரும்பியதும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையை அடுத்த மாதம் 4ம் திகதி நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் இத்தகைய முடிவுக்கு வந்திருப்பது தொடர்பாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிடுகையில்,சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் செய்யவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் பலமான கூட்டு முன்னணி அமைக்கப்பட்ட பின்பு பாராளுமன்றக் கலைப்பு, அல்லது பாராளுமன்ற ஒத்திவைப்பு,அல்லது அமைச்சரவையைக் கலைத்து சிறுபான்மை அரசாங்கத்தை அமைத்தல் போன்ற மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளனர். (ம)

---

**தமிழரின்....**

சகோதர,சகோததரிகளை விலைகொடுத்துள்ளோம். ஆயிரக்கணக்கான பொது மக்களும் தமது உயிர்களை அர்ப்பணித்துள்ளனர்.வளமான பிரதேசங்கள் யுத்தத்தால் அழிக்கப்பட்டுள்ளன.இவற்றையெல்லாம் சந்தித்துத்தான் இன்றைய இத்திருப்பு முனைக்கு வந்துள்ளோம்.

எங்களுடைய தியாகங்களையும,அர்ப்பணிப்புக்களையும் நாம் சாதாரணமாக எடைபோடக் கூடாது. இன்றைய சூழ்நிலை உருவாகுவதற்கு அர்ப்பணிப்புகளும், தியாகங்களும் தான் முக்கிய காரணங்களாகும்.எங்களுடைய இனததின் விடுதலைப் போராட்டததைப் பலவீனப்படுத்தி அழிக்க எதிரிகள் முனைந்துள்ளபோதும் தேசியத், தலைவர் பிரபாகரனும்,போராளிகளும்,மக்களும் காட்டிய உறுதிப்பாடு இன்று உலக அரங்கில் தலை நிமிர வைத்துள்ளது என்றார். (வ)

---

**அனுராதபுரத்தில்...**

ஐந்து கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

தீவிபத்துக்கான கடைகள் முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமானது என்றும் திடீரென ஏற்பட்ட தீவிபத்திற்குா்ய காரணம இது வரை கண்டறியப்படவில்லை என்றும் அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் தீவிர புலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ)

## சிப்பாயை விடுவிக்குமாறு கண்காணிப்புக் குழு கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ நீதிமன்றத்தினால தடுப்புக் காவலில் வைக்கபட்டுள்ள இராணுவச் சிப்பாயையும், பொலிஸ் உத்தியோகத்தரையும் விடுதலை செய்யுமாறு இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கோரியுள்ளது.

இக் கோரிக்கை தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிககப்படுகிறது.

இது விடயத்தில் கண்காணிப்புக்குழு மேறகொண்டு நடவடிக்கை எதனையும் எடுக்க முடியாதெனவும் சமாதானப் பேச்சுவார்த்தை மேசையிலேயே இது விடயம் ஆராயப்பட வேண்டும் எனவும் குழுவின் துணைத் தலைவர் ஹொாக் லண்ட் தெரிவித்துள்ளார். (த)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் . வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மு.செல்லையா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நல்லூர் உதவிப பிரதேச செயலர் சி.இரவீந்திரசர்மா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.(த-5)

## கடற் படை தீவிர ரோந்து

(திருகோணமலை)

குச்சவெளி கல்லம்பத்தைப் பகுதியில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலை முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அப்பகுதியில் தீவிரப்படுததப்பட்டுள்ளன.

திருகோணமலையில் இருந்து கரையோரப் பாதை வழியாகச் செல்லும் பயணிகளும் வாகனங்களும் மீண்டும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## குடும்ப புனர்வாழ்வு அதிகாரிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

டென்மார்க்கில் இருந்த நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த குடும்ப புனர்வாழ்வு நிலையத்தைச் சோந்த அதிகாரிகள் நேற்று நண்பகல் 11 மணிக்கு யாழ்.செயலகத்திற்குச் சென்று யாழ்.மாவட்ட திட்டப்பணிப்பாளர் சுந்தரம்பிள்ளையுடன் கலந்துரையாடினர்.

இச் சந்திப்பின் போது யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிலை, பாதிக்கப்பட்டகுடும்பங்களுக்குதிட்ட ஆலோசனை வழங்குவது என்பன பற்றி கலந்துரையாடப்பட்டது. (த-7)

## தமிழீழத் தேசிய விளையாட்டு நேற்று பரிசளிப்புடன் நிறைவு

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவின் இறுதி நாள் போட்டி,பரிசளிப்பு நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் முன்னிலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நேற்று பகல் நடைபெற்ற மென்பந்து,உதைபந்து இறுதிப் போட்டிகள் இரண்டிலும் திருமலை அணிவெற்றி பெற்றது.

மென்பந்து போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய திருமலை அணி 20 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 17.3 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து52 ஓட்டங்களைமட்டும் பெற்று தோல்வி அடைந்தது.

திருமலை அணி வீரர் ஹரீஸ் 10 ஓட்டங்களை கொடுத்து நான்கு விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

உதைபந்தாட்ட இறுதிப் போட்டியிலும் திருமலை அணி வெற்றி பெற்றது. ஆட்டத்தின் 23 வது நிமிடத்தில் திருமலை அணி வீரர் வாஹீட் மன்னார் அணிக்கு எதிராக கோல் ஒன்றை அடித்தார்.

மன்னார் அணியினருக்கு நான்கு மூலை உதையுட்பட பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அதனை நழுவ விட்டுவிட்டனர். ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது.

உதைபந்து, மென்பந்து ஆட்ட நாயகர்களாக முறையே திருமலை அணியைச் சேர்ந்த தர்மபாலன் சாள்ஸ்வசந்தன் ,அப்துல் முத்தலிப் ஹரீஸ் ஆகியோரும் ,கரப்பந்து, வலைப்பந்து ஆட்டநாயகர்களாக முறையே யாழ். அணியைச் சேர்ந்த கமலேந்தி மகிதரன், திருச்செல்வம் சங்கீதா ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டனர்.

கரப்பந்து, வலைப்பந்து போட்டிகளில் வெற்றிபெற்ற யாழ்.அணிகளுக்கான இரண்டு தங்கப்பதக்க விருதினை நியூ கமல் நிறுவனமும், மற்றைய இரு அணிகளுக்குமான விருதினை இளந்தென்றல் வாணிபமும் அன்பளிப்புச் செய்தன.

போட்டிகளின் முடிவைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றது. தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா,மாவட்ட விளையாட்டுக் குழுச்செயலாளர் விஜயசிறி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் உட்பட பலர் உரையாற்றினர்.

நிகழ்வில் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா உரையாற்றுகையில்,தமிழீழத்தின் எட்டு மாவட்டத்திலும் உள்ள விளையாட்டு அணிகள் ஒரு கொடியின் கீழ் விளையாட்டுக்களில பங்கு பற்றியமை தமிழீழத் தேசியத்துக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்துள்ளது எனக் கூறினார்.(த)

## அரசியல் தஞ்சம் கோரியவர்களை திருப்பி அனுப்ப வேண்டாம்

### 28ம் திகதி லண்டனில் கூட்டம்

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளவர்களை திருப்பி அனுப்பக் கூடாதென்ற கோரிக்கையை முன்வைத்து 28ம் திகதி வெள்ளிக்கிழமை லண்டனில் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் கூட்டமும் நடைபெறவுள்ளது.

லண்டனில் நடை பெறவுள்ள இக் கூட்டத்திற்கு லண்டன் மாநகர உறுப்பினர் கே.சத்தியமூர்த்தி தலைமை தாங்கவுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு உடனபடிக்கை ஏற்பட்டு சமாதான சூழ்நிலை ஏற்பட்டு வருவதை அடுத்து ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழர்களை திருப்பி அனுப்புவதற்கு அந்நாடுகள் நடவடிக்கை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு இயல்பு வாழ்க்கை திரும்பும் வரை அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழர்களைத் திருப்பி அனுப்பக் கூடாதென்று இக் கூட்டததில் கோரிக்கை விடப்படவுள்ளது (வ)

## சமாதான சூழலில் புதிய காவலரண் அமைக்கும் படையினர்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைவீதியில் தாவடிப் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த பாரிய இராணுவ முகாமை மேலும் பலப்படுத்ததும் முயற்சியில் அம்முகாமில் உள்ள இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுவ முகாமில் ஏற்கனவே உள்ள இராணுவக் காவல் அரண்களுக்கு மேலதிகமாக பலத்த பாதுகாப்புடன் புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகிறது. சமாதான சூழலில் இராணுவத்தின காவலரண் அமைக்கும் செயலானது அப்பகுதி மக்களை அச்சத்திற்குள்ளாக்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிது.

இதே வேளை தட்டாதெருசந்தியில் உள்ள இராணுவத்தினர் அரச மரத்தின் கீழ் வைத்திருந்த புத்தர் சிலையை அப்புறப்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.(வ)

## நிக்கொட் திட்டத்தின் கீழ் 60பாடசாலைகளுக்கு தளபாடங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நிக்கொட் திடடத்தின் கீழ் யாழ். குடாநாட்டில் உள்ள 60 பாடசாலைகளுக்கு தளபாடங்கள வழங்கப்படவுள்ளன.

இதற்கென தென்மராட்சி வலயத்தில் உள்ள 5பாடசாலைகளும், வடமராட்சி வலயத்தில் 8 பாடசாலைகளும்,யாழ்.வலயத்தில் 25 பாடசாலைகளும்,தீவக வலயத்தில் 12பாடசாலைகளும், வலிகாமம் வலயத்தில் 10 பாடசாலை களும் தெரிவு செய்யபட்டுள்ளன.

இத் திட்டத்தில் தளபாடப் பற்றாக்குறை நிலவும்பாடசாலைகளே இணைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-7)

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
V.S.P லஞ் ஒயில்
தயாரிப்பாளர்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்26.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.